Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 331 சித்திரை. April. 2024

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
30 TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A




# தற்காலிக வெற்றிகளைக் கொண்டாடுவதிலேயே தாயகத்தில் எமது காலம் போகின்றது

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி



## "மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ"

## யேர்மனியில் தேர்க்காலம் 2024

அனைவருக்கும் சித்திரை தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்

Model : Taarah Nayani- Canada
Photography : AKR Visualizers

இதழ்: 331




# என்னவென்று நான் சொல்ல!



கனடாவில் எனது தம்பியின் நெருங்கிய நண்பர் இல்லத்திற்குக்கு என்னை அறிமுகப்படுத்த அழை த்துச் சென்றார்.

அங்கு சென்றபோது நண்பனின் மனைவி இரத்த அழுத்தம் எவ்வளவு என தனக்கு பார்த்துக்கொண்டு இருந்தார்.

நண்பர் எம்மை வரவேற்று அமரவைத்தார். என்ன சாப்பிடுவீங்கள் சுடச் சுட வடை வேண்டுமா? அல்லது இனிப்பா?

விருப்பம் என்றால் மோதகமும் இருக்கு,அவவுக்கு விருப்பம் என்று,எப்பவும் மார்க்கம் போனால் வாங்கி வருவேன், நீங்கள் வருகிறீர்கள்என்றுவடைக்குபெயர்பெற்ற அன்னபூரணியில் வாங்கி வந்தேன். எனக்கும் வடைதான் தாருங்கள்.என்றேன்.



● மாதவி

அது சரி அம்மா சுட்ட தோசை, அருமை. வடை அருமை. என்று நாங்கள் சொல்வோம். உங்கள் பிள்ளைகள் என்ன சொல்வார்கள் என்று கேட்டேன். அவரும் தயங்காமல் பிள்ளைகள் கடைப்பெயர்தான் சொல்லுவினம் என்றார். நான் ரூறிஸ் விசாவில் வந்து இப்பதான் 2 மாதம். அண்ணாவின் கதை அப்படி, இப்படித்தான் இருக்கும் என்று தம்பி நாசூக்காக நண்பனுக்கு சொன்னார்.

நண்பனின் மனைவி பிறசர் செக்கப்பண்ணி முடிந்ததும், தன் கணவனிடம், பார்வையால், கூற, கணவன் மெதுவாக மனைவி அருகில் வந்து, 148/85 ஆ! கொஞ்சம் கூட ஆனால் ஓக்கே என்றபடி எம்மோடு தொடர்ந்தார்.

கொஞ்சம் கூட என்றதன் பின் எனக்கு, எவர் பேச்சும், என் காதில் விழவில்லை. கீழே 90 வரப்படாது, மேலுக்கும் 128 அளவு.கொஞ்சம் கூடலாம். உப்பை குறையுங்கோ. நடவுங்கோ. அவர் எல்லாவற்றையும் உன்னிப்பாக கேட்பதை பார்த்து, ஆர்வக்கோளறில் இன்னும் எனக்கு தெரிந்ததை எல்லாம் எடுத்து விட்டேன்.

ஒருவர் செல்ல ஒருவர் செவிமடுத்தால், சொல்பவருக்கு அதைவிட வேறு பாக்கியம் என்ன. எனக்கு தெரிந்ததும், யூரிப்பில் வந்ததும், நண்பர்கள் அனுப்பியதும், என வட்சப்பில் வந்து நான் படித்ததை எல்லாம் எடுத்துவிட்டேன்.

ஒரு நோயாளி டாக்கரிடம் கதைப்பது போல், மிக உன்னிப்பாக நான் கதைப்பதைக் கேட்டுக்கொண்டார்.இறுதியாக, அவரை பிடித்துப்போக நீங்கள் இலங்கையில் என்ன செய்தீர்கள்,என்று கேட்டேன். தான் டாக்டர், இலங்கையில் 20 வருடங்கள் தொழில் செய்தேன் என்றார்.

அவர் செவி மடுத்தது உண்மை.நீங்கள் டாக்டர் நான் சொல்லச் சொல் கேட்டீர்கள் என்றேன்.

ஓம் எனக்கும் தெரியாத ஏதும் இருக்கலாம் என்றார்.செவிமடுத்தல், அது ஒரு வித அடக்கத்தின் வெளிப்பாடு என்பதனை உணர்ந்தேன். இதனை என்னவென்று நான் சொல்ல!




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 331



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
‘ஓவியக்கலைவேள்’
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

“வெற்றிமணிமொழி”
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


## தற்காலிக வெற்றிகளைக் கொண்டாடுவதிலேயே தாயகத்தில் எமது காலம் போகின்றது

# பேரினவாதிகளின் இலக்கும் சிவராத்திரி தின சம்பவமும்



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலையில் நடைபெற்ற சம்பவங்கள் இலங்கை அரசியல் எந்தத் திசையில் செல்கின்றது என்பதை மீண்டும் ஒரு தடவை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. இலங்கை முழுவதையும் சிறுபான்மையினர் என்று எவரும் இல்லாத சிங்கள – பௌத்த நாடாக மாற்றுவதற்கா நன்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கம்தான் வெடுக்குநாறி மலையில் ஆளும் தரப்பினர் வகுத்துள்ள திட்டம்.

இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதைப் பொறுத்தவரையில், தமிழ்த் தரப்பினரிடம் திட்டவட்டமான உபாயங்கள் எதுவும் இல்லை. தற்காலிக வெற்றிகளைக் கொண்டாடுவதிலேயே எமது காலம் போகின்றது.



தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வழிபட்டு வந்த வெடுக்குநாறி ஆதிசிவன் கோவிலை அங்கிருந்து அகற்றிவிட்டு, அதனை பௌத்த விகாரையாக்குவதற்கான திட்டங்களுடன் பௌத்த பிக்குகள் தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் செயற்பட்டுவருகின்றார்கள். இதில் இரகசியம் எதுவும் இல்லை. இந்தப் பின்னணியிலேயே, சிவராத்திரி தினத்தன்று மீண்டும் அங்கு பிரச்சினை வெடித்துள்ளது.

தமிழ் தரப்பினரும் இந்தப் பிரதேசத்தை விட்டுக்கொடுப்பதில்லை என்பதில் உறுதியாக இருப்பதால், வெடுக்குநாறி மலை ஒரு பலப்பரீட்சைக்குரிய இடமாக இப்போது மாறியிருக்கின்றது. படையினர், காவல்துறை, தொல்பொருள் திணைக்களம், பௌத்த பீடங்கள் என்பன இணைந்துதான் பௌத்த மயமாக்கல் திட்டத்தை முன்னெடுக்கின்றன. அரசாங்கமும், நீதித்துறையும் அவர்களின் பக்கத்தில் தான் நிற்கின்றன. இதனால், அவர்களை இலகுவாக தமிழ்த் தரப்பால் எதிர்கொள்ள முடியாது. தமிழ் மக்களின் தொன்மையான வழிபாட்டிடங்களில், வெடுக்குநாறி மலை ஆதிசிவன் முக்கியமானவர். பெரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு, காட்டின் இயற்கைக் சூழலுக்கு சேதம் விளைவிக்காது, அப்பகுதி மக்களால் காலங்காலமாக வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஆனால், கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. இந்த நிலையிலேயே, ஆலய விக்கிரகங்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன. தொல்லியல் திணைக்களம் அதற்குரிய விதிமுறைகளை மீறிச் செயற்பட்டுவருகின்றது என்பதற்கான மற்றொரு உதாரணமாக வெடுக்குநாறி மலை விவகாரம் உள்ளது.

அரசாங்கத்தின் முழுமையான ஆதரவுடன் பௌத்த அடிப்படைவாதத்தின் அடாவடிகளை செயற்படுத்தும் நிறுவனமான தொல்லியல் திணைக்களம், தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை ஆக்கிரமிப்பதில் அண்மைக்காலத்தில் அதிகளவு கவனத்தைச் செலுத்தி வருகின்றது. தொல்லியல் திணைக்களத்தை நாட்டின் அதியுச்ச அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாலோ, நீதிக் கட்டமைப்பான நீதிமன்றங்களாலோ கூட கட்டுப்படுத்த முடிவதில்லை என்பதை கடந்த சில வருடங்களாக நாம் வெளிப்படையாகக் காணமுடிகின்றது.

தொல்லியல் திணைக்களம் நினைத்தால், தமிழர் தாயகப் பகுதிகளில் எதை வேண்டுமானாலும் ஆக்கிரமித்துக் கொண்டு, தொல்லியல் நிலப்பகுதி

20 ஆம் பக்கம் பார்க்க...






யேர்மனி டோட்மூண்ட் நகரில் பொன் ஒளி வீசும்
KANTHAN
மே மாதம் 10ம் திகதி
அட்சய திருதியை
தங்கத் திருநாள்
அனைவருக்கும் இனிய தமிழ்ப்
புத்தாண்டு
நல் வாழ்த்துகள்
KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
மாபெரும் திறப்புவிழா
03.05.2024 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பொன் ஒளி வீசத் திறந்து வைக்கப்படவுள்ளது.
அத்தருணம் அனைவரும் வருகை தந்து, சிறப்பித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
அன்புடன்: காந்தன் தங்க நகை மாடம் நிறுவனத்தினர்
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 / 0231 5898 1815 / 0231 5898 6470
FOLLOW US ON





# சட்டி பிரட்டி



"சாப்பிடுவதும் ஒரு கலை" என்று பறைஞ்சால் கனபேருக்கு மூக்கு முட்ட கோபம் வருது. சமைக்கத் தெரியாதாக்கள் சாப்பாட்டைப் பற்றி கதைக்க கூடாது எனுமளவிற்கு கருத்து ஷெல்கள் பலாலியில் இருந்து பறந்து வரும்.

ஆனால், யார் எவர் சொன்னாலும், சாப்பாட்டை ரசித்து ருசித்து சாப்பிடத் தெரிஞ்ச கலைஞன் இருப்பதால் தான் சமைக்கிறாக்களுக்கு மவுசு.

நல்ல வடிவாச் சாப்பிட ஆளில்லாத இடத்தில் ஆருக்கு சமைப்பீனம்? புரட்டாசிச் சனிக்கு படைக்கிற காக்காக்கா?

சாப்பாட்டை ருசித்து சாப்பிடுறதும் சும்மா லேசுபட்ட வேலை இல்லை. எதை எதை எப்படி எப்படி சாப்பிடோணும் என்ற பல நூதனங்கள் இருக்கு. அதில ஒரு நூதனம் தான் இந்த சட்டி பிரட்டி சாப்பிடுறது.

சட்டியில் காய்ச்சுற கறியை, சட்டியில் இருந்து எடுத்து இன்னொன்றுக்க போடேக்க, சட்டியில் சமைக்கும் போது இருந்த சிலபல சுவைகள் காணாமல் போய் விடும். அதனால தான் சில பேர் சட்டியில் குழம்பு கொதிக்கேக்கயே கோப்பையில் போட்டுக் கொண்டு சாப்பிடப் போய் விடுவீனம்.

"சட்டி பிரட்டுறது என்பது யாதெனில், எல்லோரும் சாப்பிட்ட பின்பு, சட்டியில் மீதமிருக்கும் கறியை வீணடிக்க கூடாது என்ற நல்லெண்ணத்தில், சட்டியை விட்டு கறியை எடுக்காமல், சட்டியில் வைத்தே கறியை பிரட்டி உண்ணுதல்" என்று சங்ககால சமையல் சுவடுகளில் வரைவிலக்கணம் வேறு இருக்கிறதாம்.

சட்டிக் கறியை சும்மா பிரட்டேலாது. எந்தெந்த கறியை எது எதால் பிரட்ட வேண்டும் என்று வேறு சில சூட்சுமங்கள் இருக்கு. கண்டதையும் கண்டதால் பிரட்டினால் சாப்பாட்டில் சுவையும் இருக்காது சாப்பிடுவதில் சுவாரசியமும் இராது.

உறைக்க உறைக்க சமைத்த பங்கு இறைச்சிக் கறியை பிரட்ட திறமான ஆள், குத்தரிச் சோறு தான். சிவக்க சிவக்க சிவந்த உறைப்புக் கறியை, சிவப்புச் சோறால் அப்படியே வழித்துத் துடைத்து வாயில் போடேக்க தான் தெரியும் அந்தக் கறிக்குள் இருந்த மகத்துவங்களின் அருமை.

அதே மாதிரி, கோழிக்கறி என்றால் இடியப்பத்தை கறிச் சட்டிக்குள் பிச்சப் பிச்சுப் போட்டுப் பிரட்டலாம். மிஞ்சின கோழிக் கறியில் எலும்புகள் இருந்தால் அதுவும் இடியப்பத்தோடு சேர்ந்து வரேக்க அந்த மாதிரி இருக்கும்.



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

கணவாய்க் கறிக்கு சரியான பார்ட்னர் எங்கட வெள்ளைப் புட்டு தான். வெள்ளை வெளீரென்று சட்டிக்குள் இறங்கின புட்டர், கணவாய்க் கறியோடு கலந்து நிறம் மாறும் அழகே அழகு. நிறம் மாறின புட்டரை ஆசை தீர கண்ணால் சில கணங்கள் ரசித்து விட்டு, அப்படியே ஒரு குழையலை எடுத்து வாயில் வைத்தால்.. சிவ சிவ யேசப்பா தான்.

இறால் குழம்பு என்றால் பாண் தான் பொருத்தமாக இருக்கும். அதுவும் ரோஸ்ட் பாணை கிட்டயும் கொண்டு வரப்படாது. இறால் குழம்பை சட்டியில் பிரட்டி எடுக்க தோதானது அச்சுப் பாண் தான். அதிலேயும் கரையை விட்டிட்டு பாண் உள்ளானை மட்டும் எடுத்து சட்டியைப் பிரட்டி, கடைசித் துண்டு இறாலையும் பாணுக்குள் அமத்தி சாப்பிட்டால் சொல்லி வேலை இல்லை (கியலா வடக் நஹா தான்).


சில நேரங்களில் இறால் குழம்புக்க மிஞ்சி இருக்கிற உள்ளியும் சட்டி பிரட்டேக்க பாணுக்க ஆப்பிட வாய்ப்பிருக்கு. உள்ளி உள்ளே போனால் வெளியே என்ன வரும் என்று சொல்லித் தான் தெரியவேண்டியதில்லை ஆனபடியால் சூதானமாக இருக்கோணும்.

சைவக்காரன்களிற்கு என்ன மாதிரி என்று சிலர் கேட்கலாம். சைவக்காரர் சட்டி பிரட்டச் சரியான கறி தக்காளி குழம்பு தான். தக்காளி குழம்புச் சட்டிக்குள் ரொட்டியை பிச்சுப் பிச்சுப் போட்டு விட்டு தான், சட்டியை பிரட்ட வேண்டும். பிறகு ஒரேயடியாக ரொட்டியை எடுத்துச் பக்கென்று சாப்பிடாமல், பிரட்டப்பட்ட ரொட்டியை ஒவ்வொரு துண்டாக எடுத்துச் ருசித்துச் சாப்பிட வேண்டும்.

சட்டி பிரட்டேக்கயும் சட்டி முழுக்க சரியாக பிரட்ட வேணும். படித்து முடித்தும் பள்ளிக் கூடத்தோடு ஒட்டிக் கொண்டிருக்கும் பழைய மாணவர்கள் போல, சட்டியின் விளிம்பிலும் ஓட்டிக் கொண்டிருக்கும் கறியைத் துடைத்து எடுத்து, சட்டியைக் கழுவத் தேவை இல்லை எனுமளவிற்கு பிரட்டி எடுப்பதில் தான் சட்டி பிரட்டல் செயற்பாடு முழுமையடைகிறது.

சட்டி பிரட்டல்.. சாப்பாட்டுக் கலைஞர்களின் பத்மவியூகம்!

APIRAAMI ENTERPRISE
EXOTIC FOOD & MONEY TRANSFERS
APIRAAMI ENTERPRISE
அபிராமி என்ரபிறைஸ்
உலகின் சகல பகுதிகளுக்கும்
அதிதுரித பணமாற்றுச் சேவை
மாதத்தின் முதல் வாரம்
மலிவு விற்பனை
எமது ஸ்தாபனத்தின் 30 ஆம் வருட சேவைக்கு கரம் தந்த அனைவருக்கும் நன்றிகள்

மளிகைப் பொருட்கள் பசுமையான
மரக்கறிவகைகள் அனைத்திற்கும் நாடுங்கள்


PFERDEMARKT 9 45127 ESSEN | Tel: 0201 23 69 25




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# பாரம்பரிய பெருமை கொண்ட வெற்றிலை

இன்னும் சில தினங்களில் சிங்கள தமிழ் புத்தாண்டு பிறக்கப்போகின்றது . பாரம்பரியமாகவும் கலாசார ரீதியாகவும் புத்தாண்டோடு பல விடயங்கள் தொடர்புகொண்டிருக்கும்.அந்தவகையில், தமிழர்களிடத்திலும் சிங்களவர்களாவர்களிடத்திலும் புத்தாண்டோடு மட்டுமல்லாமல் பல சந்தர்ப்பங்களிலும் முக்கியத்துவம் பெரும் ஓர் பொருள்தான் வெற்றிலை !

ஆன்மீக ரீதியில் வெற்றிலையின் நுனியில் மகாலட்சுமியும் , நடுவில் சரஸ்வதியும், காம்பில் பார்வதி தேவியும் வீற்றிருப்பதாக இந்து மதம் சொல்கிறது . இதனால்தான் நம்முடைய மங்கள காரியங்கள் எல்லாவற்றிலும் வெற்றிலை காலங்காலமாக இடம்பிடித்திருக்கின்றது . முன்பெல்லாம் வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் விடைபெறும்போது அவர்களுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்தனுப்பினால் குடும்பம் செழிக்கும் என்கிற நம்பிக்கையானது ஓர் மரபாகவே காணப்பட்டது. தமிழர்களின் சடங்கு சம்பிரதாயங்கள் எல்லாவற்றிலுமே வெற்றிலையும் பாக்கும் தவிர்க்கமுடியாத விடயம் . குழந்தை பிறந்தவுடன் சேனைத்தண்ணி ஊட்டுவது வெற்றிலையால்தான் . மஞ்சள் நீராட்டு விழா, திருமணம் உறுதி செய்ய தாம்பூலம் மாற்றுவது , திருமண சீர்வரிசையில் தாம்பூலத்த தட்டு , திருமணம் முடிந்தவுடன் கொடுக்கப்பட்ட தாம்பூலப் பை , வளைகாப்பு , புதுமனை புகுவிழா , கோயில் திருவிழா , முதலிய சுபகாரியங்கள் முதல் , மனிதனின் இறப்பிற்கு பின் அவனது தலைமாட்டில் விளக்கேற்றி வைப்பது முதலான இடுகாட்டு காரியங்கள்வரை வெற்றிலையின் பங்கு அலாதியானது

திருப்தியான உணவுக்குப்பின் செரிமாணத்திற்காக வெற்றிலை மெல்வதென்பது தெற்காசிய நாடுகள் பலவற்றின் பாரம்பரிய பழக்கமாம் . நாம் வெற்றிலையை தெய்வீக மூலிகையாக பார்ப்பது



போல் பல நாடுகளிலும் வெற்றிலையானது பல கோணங்களில் பயன்படுத்தப்படுகின்றது என்பது நம்மில் பலருக்கும் தெரியாதவொன்று . சண்டைபோட்ட இரண்டுபேர் சமாதானம் ஆவதன் அடையாளமாக வெற்றிலை மாற்றிக்கொள்வது மலேசியர்கள் வழக்கமாம் . சுமாத்ராவில் மனைவி கையில் வெற்றிலையைக் கொடுத்து “தலாக் தலாக் தலாக் “ என மூன்றுமுறை சொன்னால் , கணவன் மனைவிக்கிடையே விவாகரத்தானதாக அர்த்தமாம். நெதர்லாந்து சிறைக் கைதிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்திக்காக தினமும் உணவுடன் சேர்த்து வெற்றிலை கொடுக்கப்படுமாம் !? , தூக்கில் ஏற்றப்படும் முன்பு குற்றவாளிகளுக்கு கடைசியாக வெற்றிலை பாக்கு கொடுத்து மரியாதை செய்யும் வழக்கம் மியன்மாரில் உண்டாம் . சபையில்கூடி ஏதாவது முக்கியமான விடயம் பேசுவதற்குமுன் வெற்றிலை பாக்கு போடுவது வியட்நாமியர்களின் வழக்கமாம் .

நம்முடைய சங்க இலக்கியங்களில் வெற்றிலை பாக்கு மற்றும் சுண்ணாம்பு முதலியவை பாலியல் குறியீடுகளாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. உணர்வுகளைத் தூண்டும் சக்தி தாம்பூலத்திற்கு இருப்பதனால், ஏலம், கற்பூரம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு முதலிய வாசனைப் பொருட்களுடன் சேர்த்து மன்னர்கள் தாம்பூலம் உண்டார்களாம். அதுமட்டுமன்றி மன்னர்களுக்கு தாம்பூலம் மடித்துக்கொடுப்பதற்கென்றே தனியாக பணியாளர்கள் இருந்திருக்கின்றார்கள். அந்த பணியாளர்களின் கைகளில் இருக்கும் தாம்பூலப்பெட்டியானது நகை பெட்டிபோல பெரும் அலங்காரத்துடன் செய்யப்பட்டன என சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது .

மிளகு குடும்பத்தினை சேர்ந்த கொடியாக படரும் பூக்கும்தாவரமான வெற்றிலையானது ஓர் நல்ல மருத்துவ மூலிகை என்பது அனைவரும் அறிந்தவொன்றே. பார்ப்பதற்கு வெறும் இலையாக தெரிந்தாலும் வெற்றிலையில் நீர்ச்சத்து அதிகம். 84.4 % நீர்ச்சத்து , 3.01% புரத சத்து , 0.8% கொழுப்பு , உற்பட இரும்பு சத்து , விட்டமின் சி, கால்சியம், கரோட்டின், தயமின் போன்றவையும் வெற்றிலையில் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. பாம்புக்கடி விஷதினை முறிக்கும் சக்தி வெற்றிலை சாருக்கு உண்டு என்கி றது சித்த மருத்துவம் . குழந்தைகள் வயிற்று வழியால் அழும்போது வயிற்றில் கொஞ்சம் விளக்கெண்ணெய் தடவி வெற்றிலையினை லேசாக வாட்டி குழந்தையின் வயிற்றில் இடும்போது வலி குறையும் என்பது நமது பாட்டி வைத்தியம். வெற்றிலையை அரைத்து நெற்றியில் பத்துப்போட்டால் தலைவலி காணாமல் போகும். அதுமட்டுமன்றி வெற்றிலை ஓர் ஆன்டிசெப்டிக் என்பதால் காயங்களை ஆற்றும் வலிமை கொண்டது. இதனால்தானாம் பிரசவமான பெண்களை இளம் வெற்றிலைகளை மெல்லச் சொல்வதும், நாட்டு மருந்துகளுடன் வெற்றிலையினை சேர்த்துக்கொடுப்பதும் காரணம் .

வளமான மண் , மிதமான தட்பவெட்பம் , நல்ல தண்ணீர் வசதி இருந்தாலே செழித்து வளரும் வெற்றிலை அன்று தொட்டு இன்றுவரையிலும் ஓர் பணப் பயிர். சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால் வெற்றிலையில்கூட ஆண் பெண் உண்டாம். கரும்பச்சை நிறத்தில் இருந்தால் ஆண் வெற்றிலை , இளம் பச்சை நிறத்தில் இருந்தால் பெண் வெற்றிலை.பூ, கொடி,பிஞ்சு , என பிற பயன் எதுவுமின்றி வெறும் இலையால் மட்டுமே பயன்தரக்கூடியது என்பதால்தான் “ வெற்று இலை கொடி“ என்பது காலப்போக்கில் “ வெற்றிலைக் கொடியாக மருவியிருக்கலாம் என கூறப்படுகின்றது .

வெற்றிலையில் மை போட்டுப் பார்த்தால்

28 ஆம் பக்கம் பார்க்க...



பிரியா இராமநாதன்
(இலங்கை)



# யேர்மனியில் தேர்க்காலம் 2024



## யேர்மனியில் ஆலயங்களின் கொடியேற்ற தேர் உற்சவங்கள் 2024

தொகுப்பு: ஆன்மிகத்தென்றல்
த.புவனேந்திரன் (யேர்மனி)

**வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
Tel: 0202 479 60 17
கொடி : 24.05.2024 - தேர்: 01.06.2024
Hünefeld Str 63b
42282 Wuppertal

**யுலிச்சன் நவசக்தி விநாயகர் ஆலயம்**
Tel:02164 70 20 944
கொடி: 25.05.2024 - தேர்: 02.06.2024
Hoch str 10 b; 41363 Jüchen.

**சுட்காட் ஸ்ரீசித்திவிநாயர் கோவில்**
Tel: 0176 434 424 39, 7011 365 66 224
கொடி: 08.06.2024 - தேர்: 16.06.2024
Lehmfeld Str 18 70374 Suttgart

**கற்றிங்கன் ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 02324 27061, 01577 36 63 939
கொடி: 08.06 2024 - தேர்: 16.06.2024
Gottwald Str 23 45525 Hattingen.

**ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்**
Tel: 02388 302 223
கொடி: 24.06.2024 - தேர்: 07.07.2024
Siegenbeck Str 4-5, 59071 Hamm

**எசன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயம்**
Tel: 0201 806 74 33
அலங்கார உற்சவம்: 06.07.2024-
தேர்: 14.07.2024
Kloster Str 49 a, 45149 Essen

**டோட்மூண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
Tel: 0231 72515165
கொடி: 06.07.2024 - தேர்:14.07.2024
Klefer Str 24, 44225 Dortmund

**கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
Tel: 02151 565 00 45
கொடி: 15.06.2024 - தேர்: 23.06.2024
Elisabeth Str 103-105. 47799 Krefeld.

**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேலழகர் ஆலயம்**
Tel: 02381 291 03
கொடி: 12.07.2024 - தேர்: 21.07.2024
Roon Str 2 a; 59065 Hamm

**பிறாங்போட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**
கொடி:09.06.2024 - தேர்:22.06.2024
Adelbert 61-63; 60486
Frankfurt/M. 069 979 45 618.

**கொமஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
Tel: 02261 5015 964, 0176 3015 2913
கொடி: 22.06.2024 - தேர்: 30.06.2024
Industrie Str 7; 51643 Gummersbach

**சுட்காட் சித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 0711 470 30 47
கொடி: 19.07.2024 - தேர்: 28.07.2024
Waiblnger Str 30; 70372 Suttgart

**நூறென்பேர்க் சித்திவிநாயகர் ஆலயம்.**
Tel: 0911 439 586 07
கொடி: 29.04.2024 - தேர்: 12.05.2024
Humbold Str 103. 90459

**கிஸ்கெம்ரெக் கனகதுர்க்க அம்பாள் ஆலயம்**
Tel: 07021 807 43 99
அலங்காரத் திருவிழா: 27.07.2024 -
தேர்: 04.08.2024
Alleen Str 18-20 73230 Kirchheim U. Teck.

**ஹம் சித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 02381 162 686
கொடி: 27.07.2024 - தேர்:04.08.2024
Ferdinand poggel Str25, 59065 Hamm

**பேர்லின் மயூரபதி முருகன் ஆலயம்**
Tel: 030 694 6900, 0171 526 73 07
கொடி: 09.08.2024 - தேர்: 01.09.2024
Blaschko Alle 48; 12355 Berlin.

**கவுஸ்கொம் முல்கைம் முருகன் ஆலயம்**
Tel: 0152 537 924 93
அலங்காரத் திருவிழா: 23.08.2024 -
தேர் : 01.09.2024
Hauskam Str 58; 45476 Muelheim/Ruhr

**பிறீமன் வரசித்தி விநாயகர் ஆலயம்**
Tel: 0421 247 966 58
கொடி 09.08.2024
தேர் 18.09.2024
Ilse Kaisen Str 24. 28327 Bremen.


**கனோவர் முத்துமாரி அம்பாள் ஆலயம்**
Tel: 0511 471 149, 0151 74 21 89 05.
கொடி: 02.08.2024 - தேர்: 11.08.2024
Carl- Buderus Str 3a; 30455 Hannover.

**கைபுறோன் கந்தசாமி கோவில்**
அலங்காரத் திருவிழா. 18.05.2024
தேர்: 26.05. 2024
Siemens Str 11; 74177 Bad friedrichshall.
ஆலயம் : 07136 270 62 44
மதிவாணன் : 0176 603 61 624




Dortmund நகரில்...
S.K.SILKS
GOLD PARAADISE
ஆடைகளின் ராஜமுத்திரை
என்றும் தரமும் மலிவும் நிரந்தரம் நாளுங்கள் மகிழுங்கள்!
எமது நிறுவனத்தின் 22 ஆம் ஆண்டையும் சித்திரை தமிழ் புத்தாண்டையும் வரவேற்று
மாபெரும் மலிவு விற்பனை!
23.03.2024 முதல் 13.04.2024 வரை
ஒரு சேலை வாங்கினால் ஒரு சேலை இலவசம் (Buy one get one free)
ஆடைகள் அனைத்தும் அதிரடி மலிவு விலையில்.
Mr.P.Sritharan
Proprietor
Tel: 0231 9501 647
Adler Str 33-44137 Dortmund
22 YEARS ANNIVERSARY
S.K.SILKS





# வானத்தில் இருந்து நான் வரைந்த சித்திரம்

வானத்தில் இருந்து நான் வரைந்த சில ஓவியங்கள். யேர்மனி விமானத்தில், செல்லும்போது, வானில் இருந்து முகில் கூட்டங்களுக்கு இடையாக, சில சித்திரங்கள் கண்ணில் பட்டன. மேலே நான் வரைந்த ஓவியம் என்று குறிப்பிட்டேன், அதனை வேண்டுமானால் நான் இனம் கண்ட ஓவியம் என்று வேண்டுமானால், மாற்றிக்கொள்ளலாம்.

யேர்மனியில் நிலக்கரிச்சுரங்கங்கள், உள்ள இடங்களை இங்குள்ள படங்களில் காணலாம்.

இந்த நிலக்கரி சுரங்கங்களினால் பல கிராமங்கள் இடம் பெயரவேண்டியும், வந்தது. ஆனால் இலங்கையில் நம் தாயகப் பகுதிகளில், இடம் பெயர்ந்தவர்களுக்கு, இராணுவம் அபகரித்த, அதாவது பாதுகாப்பு வலயங்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த கிராமங்களுக்கு பதிலாக எந்த நட்ட ஈடுதன்னும் வழங்கவில்லை. ஆனால் யேர்மனியில் அவர்கள் வாழ்ந்த கிராமங்களை, அதே பெயரில் வேறு இடத்தில், அவர்களுக்கான வீடுகள், வைத்தியசாலைகள், வங்கிகள், ஏன் தெருக்கள் கூட அதே பெயரில் அமைத்தும் கொடுத்துள்ளனர். சரி இனி சித்திரத்திற்கு வருகிறேன்.

நிலக்கரி தோண்டப்பட்ட இடமே மேல் இருத்து பார்க்கும் போது அழகான யடிளவசயஉவ யசவ அக தெரிகிறது. இயற்கையும், எமது செயல்களும், சில நேரங்களில் நாம் தீட்டமிட்டு, வரையும் சித்திரங்களை, விட சிறப்பாக வருவதும் உண்டு, அதற்கு இச்சித்திரங்கள் பெரும் உதாரணம்.

உங்கள் பார்வை. அதன் கோணங்கள், கலைநயம் உள்ளதாக அமையும் போது. சித்திரக்கண்காட்சி என்று எங்கும் பார்க்கும் எமக்கு, இயற்கை தினம் தினம் பல புதிய சித்திரங்களை காட்சிப்படுத்திய வண்ணமே உள்ளன.

கண்ணா (யேர்மனி)



# 50 € போட்ட குட்டி 5 கோடியானதா!

## Compounding Effect என்ற உலக அதிசயம்!



90ஸ் கிட்ஸ்க்கு ( 90s Kids ) மட்டும் தான் தெரியும் புத்தகத்துக்குள் வைத்த மயிலிறகு, குட்டி போடும் என்று. இது ஒரு கற்பனை மகிழ்ச்சி ஆனால் அதே 90ஸ் கால கட்டத்தில் ஒருவரை உலகப் பணக்காறராக உருவாக்கிய நிஜமான அதிசயம் தான் இந்த Compounding Effect. கதை மிகவும் சுவாரசியமாக இருக்கும். விசில் அடிக்க தெரியாவிட்டால் விசில் அடிக்க கற்றுக் கொள்ளுங்கள். இந்தத் தொடர் முடியும் பொழுது உங்களை அறியாமல் நீங்களே ஆரவாரப்படுவீர்கள்.

1950இல் ஒரு இளைஞன், அவன் பக்கத்து வீட்டில் இருந்த ஒரு வசதியான நபரிடம் சொல்லுகின்றான், தான் ஒரு பங்குச்சந்தை என்கின்ற விடயத்தில் வேலை செய்கின்றேன். நீங்கள் என்னிடம் முதலிட்டால் அதில் வருகின்ற லாபத்தை உங்களுக்கு தருவேன். என்று ஒரு புதிய விடயத்தை அறிமுகப்படுத்தி பேசினான். அந்தப் பக்கத்து வீட்டு நபருக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் இந்த இளைஞனின் துடிப்பை பார்த்து ஒரு 50 டாலர் பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு. ”இதை என்னுடைய பரிசாக வைத்துக் கொள். நீ பெரிய ஆளாக வரவேண்டும்” என்று வாழ்த்தி விட்டு சென்றார். காலங்கள் இப்படியே உருண்டோடுகின்றது கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

அந்த பணக்காரராக இருந்த நபர், வேறு ஒரு ஊருக்கு சென்றார். அங்கு பல முயற்சிகள் செய்து அவற்றில் எல்லாம் தோற்று மிகப் பெரிய கடன் நஷ்டம் என்று வாழ்க்கையில் தோல்வியுற்ற நபராக 60 வயதில் மீண்டும் திரும்பி தன் சொந்த ஊருக்கு வருகின்றார். வந்து என்ன செய்வது என்று தெரியா மல் இருக்கும் பொழுது எதேச்சையாக

சிந்தனை சிவவினோபன் (யேர்மனி)

28 ஆம் பக்கம் பார்க்க...






வெற்றிமணி திருமண சேவை




யேர்மனியில் Master படித்து
முகாமையாளராக பணிபுரியும்
நற்குணமுள்ள 29 வயது நிரம்பிய
சைவ வேளாளர் குல எமது மகனுக்கு
ஏற்ற நற்குணமுள்ள பட்டதாரி
மணமகளை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு பெற்றோர்:
+4915787447156

மங்கல இசைக்குழு

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர்
குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்





N.K.Raguraman
Dresdener
Str.6 50126
Bergheim
Germany
Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240

அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# யேர்மனியில் சர்வதேசப் பெண்கள் நாள் ௨0௨௪











கடந்த மாதம் 08.03.2024 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு, டோட்மூண்ட் தமிழர் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. டோட்மூண்ட் நகர தமிழ்ப் பெண்கள் மன்றம் இதனை முன்னெடுத்தது. அகவணக்கம்,அதனைத் தொடர்ந்து,றாஜி அவர்களின் வரவேற்புரையுடன் விழா சிறப்பாக ஆரம்பமானது. நிகழ்ச்சிகளை மிதிலா சிறப்பாக தொகுத்து வழங்கினார்.மகளிர்தின வரலாற்றுக் குறிப்பினை அன்னலஷ்மி அவர்கள் எடுத்துரைத்தார். மேலும் சர்வதேச சாதனைப் பெண்கள் சிலரின் ஒளிப்படத்தினை நிறுத்தி அதன் முன்நின்று சாதனைப்பெண்களின் வரலாற்றை சுருக்கமாகச் சொன்னார்கள்.

மேடம் மேரி கியூரி பற்றி மிதிலா, றோசா பார்க்ஸ் – பற்றி, றாஜி,ஜெர்ட்ரூட் எலியன் பற்றி பிரியாகல்பனா சாவ்லா பற்றி தயா,முனிபா மசாரி – பற்றி பார்த்திமா பஸ்லீனா,நவநீதம்பிள்ளை பற்றி குமுதா, ஜரினா சென்ட்லர் பற்றி மல்லிகா அவர்களும் உரை நிகழ்த்தினார்.தொடர்ந்து



பெண்கள் நாளில் கேள்வியும், பதிலும் என்ற நிகழ்ச்சியை சகானா அவர்கள் நடத்தினார்.

வெற்றிமணி பத்திரிகை பங்குனி மாதம் வெளியான பெண்கள் தினச் சிறப்பிதழ் பற்றிய சிறு ஆய்வு நிகழ்ச்சியும், இடம்பெற்றது. நகுலா. சிவநாதன்,வி. சபேசன்,மிதிலா,ஆகியோர் கலந்து உரையாற்றினர். நகுலா சிவநாதன் தனதுரையில், வெற்றிமணி பத்திரிகை ஒவ்வொரு வருடமும், பங்குனி மாதம், பெண்கள் நாளில் ஒரு சாதனைப் பெண் ஒருவரை, பங்குனி மாதம் கௌரவ ஆசிரியராக நியமித்து கௌரவம் வழங்கி வருகிறது. ஒவ்வொரு முறையும் தலைசிறந்த பெண்களை கௌரவிப்பது மகிழ்ச்சியானது. என்றார்.

அடுத்து வி.சபேசன் அவர்கள் வெற்றிமணி சிறப்பிதழில் கௌரவம் பெற்ற கவிதா லட்சுமி அவர்களை நன்கு அறிந்தவர், அவரது மாணவர்களது நிகழ்ச்சிகளையும், நேரில் பார்த்தவர். எனவே அனுபபூர்வமான தன்கருத்தை முன்வைத்தார். கவிதாவின் ஆற்றலை அறியும் வண்ணம் அவரது உரை அமைந்து இருந்தது. அத்துடன் வெற்றிமணி பத்திரிகை அன்று முதல் பெண்களை ஆற்றல் மிக்கவர்களா உருவாக்கிவருவதில் சிறப்பாகப் பணியாற்றுகிறது என்றார். மிதிலா தனது உரையில் கடைகளுக்குச் சென்றால் வெற்றிமணி பத்திரிகை எடுக்காமல் நகரமுடியாதபடி ஒருவித ஈர்ப்பு வெற்றிமணிக்கு உள்ளதை உணரமுடிந்தது. ஆரோக்கியமான பல ஆக்கங்கள் உள்ள பத்திரிகை வெற்றிமணி என்றார். வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் தன் பதிலுரையில், கௌரவ ஆசிரியராக கௌரவம் பெற்ற கவிதா லட்சுமி அவர்களின் படைப்புகளின் சிறப்பையும், அவரது தன்னடக்கம் பற்றியும், எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்த உரை நிகழ்வில், ஏலையா முருகதாசன், இந்து தெய்வேந்திரன், கரிணி கண்ணன் ஆகியோர் உரையாற்றினார். அடுத்து பெண்கள் தின நிகழ்ச்சியில் விளையாட்டுக்கள்,நேரமிது நேரமிது –றாஜி,கண்டுபிடி கண்டுபிடி – பாத்திமா பஸ்லீனா,புதிர்கணக்கு – அன்னலஷ்மி, ஒரு சொல் ஒரு பாடல் – பிரியா, இசையால் வசமாகா இதயமெது – குமுதா, பாடும் பந்து – தயா, என இவர்கள் நிகழ்ச்சிகளை தந்தார்கள். சிற்றுண்டி, இராப்போசனம் என நிகழ்ச்சி ஒரு வித குடும்ப உணர்வை தந்த நிகழ்வாக அமைந்தது.

– றாஜி


டோட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

சனிக்கிழமை 15.00– 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde



தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்



# “மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ”

## உங்கள் வாழ்வும் உங்கள் முடிவும்! நின்று பேச நேரமில்லாது






அவசரகதியில் இயங்கிக்கொண்டிருக்கும் இந்த உலகின் போக்கில் நாமும் ஓடிக்கொண்டே இருக்கின்ற இந்தக் காலத்திலும் பலரும் சிந்தையில் கொள்கின்ற பற்றியமென்பது அடு(டு)த்தவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதாகவே இருக்கின்றது.

அடுத்தவர்களென்பது நமக்கு நன்மை நினைக்கின்ற பெற்றவர்களாகவோ, உடன் பிறந்தவர்களாகவோ, நண்பர்களாகவோ, வேறு உறவினர்களாகவோ இருந்தால் கூட நன்றுதான். ஆனால் யாரென்றே தெரியாத மனதர்களும், நமக்கு நடக்கும் தீமைகளைப் பற்றியே விமர்சிக்கக் காத்திருக்கும் மனதர்களாகவும் இருக்கும் பட்சத்தில் வருகின்ற “மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ“ என்ற எண்ணம்தான் முன்னேறவே விடாமல் கட்டிப்போட்டுவிடுகின்றது.

நம்மை முன்னேறவே விடாமல் அடித்து ஆழத்தில் தள்ளியவர்கள் என்ன நினைப்பார்களோ, யாரென்றே தெரியாத மூன்றாம் மனிதர்கள் என்ன நினைப்பார்களோ என்றெல்லாம் எண்ணத் தொடங்கினால் நம் முயற்சிகளும் முன்னேற்றங்களும் தடைபட்டுவிடும். தோல்வியோ வெற்றியை என்னுடைய முடிவு என்று சரியான சிந்தனையோடு இறங்கிவிட்டால் எது குறித்தும் சந்திக்க வேண்டியதில்லை. அடுத்தவர்களை ஒருபோதும் திருப்திப்படுத்தவே முடியாது. அவர்கள் தமக்குத் தோன்றியவற்றையெல்லாம் போகும்போக்கில் சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். அதையெல்லாம் எடுத்துக்கொண்டு யோசிக்கத் தொடங்கினால் கவலைப்படுவதற்கே நேரம் சரியாகவிடும்.




உதாரணமாக ஒரு கதை சொல்வதுண்டு. கணவன் மனைவி இருவரும் ஒரு கழுதையில் பயணம் செய்துகொண்டிருந்தனர். வழிப்போக்கர்கள் அதைப் பார்த்துவிட்டு “இரக்கமே இல்லாத மனிதர்கள் ஒரு வாயில்லாத பிராணி மீது இருவர் செல்கின்றனரே“ எனக் கூறினர். உடனே கணவன் இறங்கிக் கொண்டு தன் மனைவியை மட்டும் கழுதையின் மீது அமர்த்திக்கொண்டு தம் பயணத்தைத் தொடர்ந்தர்கள்.

சிறிது நேரத்தில் அவ் வழியால் போன வழிப்போக்கர்கள் “ இவள் எத்தகைய திமிர் பிடித்தவள் தன் கணவனை நடந்து வரச் சொல்லிவிட்டு இவள் கழுதையின் மீது அமர்ந்து செல்கின்றாள்“ என்றனர். உடனே மனைவி இறங்கிக் கொண்டு கணவனை கழுதையில் அமரச் சொன்னாள். சிறிது நேரம் கழித்து அவ்வழியால் சென்ற வேறு வழிப்போக்கர்கள் “ இவன் எத்தகைய கொடுமைக்காரனாக இருக்கிறான். ஒரு பெண்ணை நடந்து வர வைத்துவிட்டு இவன் சொகுசாகக் கழுதையின் மீது பயணிக்கிறான்“ என்றார்கள்.

இப்படி மாறுபட்ட விமர்சனங்களால் மனமுடைந்து இருவரும் நடந்து செல்லத் தொடங்கிவிட்டனர். சிறிது தூரம் சென்றதும் அங்குள்ள வழிப்போக்கர்கள் “இவர்கள் சரியான முட்டாள்களாக இருக்கின்றார்கள். கழுதையை வைத்துக்கொண்டு இருவரும் நடந்து செல்கின்றார்கள்.இவர்களைப் போல் பைத்தியக்காரர்கள் யாருமே இல்லை“ என்று கூறினார்கள்.

இதே நிலமைதான் நமக்கும். நாம் எதைச் செய்தாலும் விமர்சிப்பதற்கு மட்டுமென்றே சிலர் இருப்பார்கள்.அவர்களை ஒருபோதும் உங்களால் திருப்திப்படுத்த முடியாது. விமர்சிப்பதென்று முடிவெடுத்தவர்களுக்குப் பாராட்டக் காரணங்கள் கிடைக்காது. அவர்கள் கண்ணுக்குத் தெரியப்போவதென்னமோ உங்கள் குறைகளும், உங்கள் தோல்விகளும்தான். இவர்களுக்குப் பயந்து உங்கள் முயற்சிகளைக் கைவிட்டுவிட்டால் உங்கள் வெற்றிகளை நீங்களே குழி தோண்டிப் புதைத்தது போலாகிவிடும்.

உங்கள் மேலான உண்மையான அக்கறையில் சொல்பவர்களின் கருத்துக்களுக்குச் செவி சாயுங்கள். சரியானதை எடுத்துக்கொள்ளுங்கள். அந்த ஆலோசனைகளில் இருந்து சிந்தித்து நீங்களாக முடிவெடுங்கள். ஆனால் பொத்தாம்பொதுவாகக் கூறும் அறிவுரைகளையோ, உங்களை வீழ்த்துவதற்காகப் பிரயோகிக்கும் உங்கள் குறைகளையோ ஒருபோதும் காதில் வாங்காதீர்கள்.

நீங்கள் எதைச் செய்தாலும் இந்த உலகம் விமர்சிக்கவே போகின்றது. உங்களுக்கான உங்கள் முடிவுகளை நீங்களே எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.உங்கள் முடிவுகளின் நன்மைகளையும் தீமைகளையும் நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள். நிறைகளை வளருங்கள் குறைகளை சரிப்படுத்த முயற்சியுங்கள்.



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

பிறரின் ஆலோசனைகளுக்கெல்லாம் செவிசாய்த்துக்கொண்டு மட்டுமே இருந்தால் உங்களுக்கான முடிவுகளை நீங்களே எடுக்க முடியாமல் போய்விடும்.

உங்கள் வாழ்வும் உங்கள் முடிவுகளும் உங்கள் கையில்தான் உள்ளது.

Nandy's Catering & Partyservice

NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE

Düsseldorf

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.

பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974

www.Nandys.de | email: info@nandys.de

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்


# Jaffna Bazar Jewellery

அனைவருக்கும்
இனிய சித்திரை
தமிழ் புத்தாண்டு
நல்வாழ்த்துகள்



தங்க நகைகள்
என்றால் தங்கள்
மனதில் நிலைத்து
இருப்பவர்கள்
நாங்கள் என்றும்
நாடுகள்

2024ம் ஆண்டின்
புதிய வரவு!
புத்தம் புது அழகிய
டிசைன்களில்
தங்க நகைகள்



பொன்னுருக்கு,
காதுகுத்து
வைபவங்களுக்கு
எம்மை
அழையுங்கள்

திருத்த
வேலைகள்
குறுகிய
காலத்துள்
செய்து
தரப்படும்.

Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள்
என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்



ஆலயங்களுக்கு
தேவையான
பூஜை
பொருட்கள்
எம்மிடம்
நிறைவாக
உண்டு

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



## எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 35

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# பரசிவ வெள்ளம்

> ஆதியாஞ் சிவனுமவன்
> சோதியான சக்தியுந்தான்
> அங்குமிங்கு மெங்குமுள வாகும் – ஒன்றே
> யாகினா லுலகனைத்தும் சாகும் – அவை
>
> யன்றியோர் பொருளுமில்லை
> அன்றியொன்றுமில்லையிதை
> ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும் இந்த
> அறிவு தான் பரமஞான மாகும்.

எங்கணும் நிறைந்திருக்கும் சிவசக்தி ரூபத்தை தரிசிக்கும் புண்ணிய நாளாக மார்ச் 8 ஆம் திகதி 2024 அமைந்திருந்தது. பதிற்றாண்டுகளின் பின்பு சர்வதேச மகளிர் தினமும், மகா சிவராத்திரியும் ஒரே நாளில் இணைந்திருந்து இரட்டிப்பு மகிழ்வைத் தந்தது. இதனை மனத்திருத்தி இம்முறை மகா சிவராத்திரி தினத்தன்று அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி வழங்கிய நாட்டியாஞ்சலி நிகழ்வுகளில் சிவசக்தி ரூபமாக இருக்கும் அர்த்தநாரீஸ்வர ஆடலையும் இணைத்துக் கொண்டோம்.

சிவராத்திரி தினத்தில் தென் இந்தியாவை சூழவுள்ள மிகப் புராதன ஆலயங்களில் நாட்டியாஞ்சலி நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கம். விசும்பினை மேடையாக்கி நர்த்தனமாடிய நடராஜப் பெருமான் உறையும் தில்லையம்பதியில் நான்கு தசாப்தங்களாக நாட்டியாஞ்சலி நிகழ்வு நடைபெறுவது உலகப் புகழ் பெற்றது. இங்கு இந்தியாவின் பல பாகங்களில் இருந்து மட்டுமல்லாது , உலகளாவிய ரீதியில் இருந்தும் நடனக் கலைஞர்கள் வருகை தந்து நாட்டிய சமர்ப்பணம் வழங்குவர். அது போலவே சிதம்பரம் தவிர இன்னும் பல ஆலயங்களில் நாட்டியாஞ்சலி இடம்பெறும்.

இம்முறை அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இந்தியாவிலும், இலங்கையிலுமாக 11திருக்கோவில்களில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிகள் வழங்கியமை சிவனின் பேரருள் என்றே எண்ணி வியக்கிறோம்.

> எங்கு நிறைந்திருந்த
> ஈசவெள்ள மென்னகத்தே
> பொங்குகின்ற தென்றெண்ணிப்
> போற்றி நின்றாற் போதுமடா

எமது பயணம் சென்னையில் இருந்து ஆரம்பித்து தில்லை சிதம்பரநாதரிடம் வந்தடைந்தோம். நாட்டியாஞ்சலிக்கு வரும் கலைஞர்கள் முதலில் தில்லை நடராஜருக்கு நாட்டிய சமர்ப்பணம் வழங்குவது வழக்கம். முன்பு திருக்கோவிலுக்கு உள்ளே நடராஜரை தரிசனம் செய்தவாறே ஆடல் வழங்க அனுமதி இருந்தது. தற்காலத்தில் அந்த ஏற்பாடு இல்லையென்றாலும், கோவில் பிரகாரத்தில் தத்தம் விருப்பப்படி நாட்டிய சமர்ப்பணம் வழங்குவர். நாமும் அவ்வண்ணமே தேவார பதிகங்களை நடனமாடினோம்.



> யாதுமாம் ஈசவெள்ளம்
> என்னுள் நிரம்பியதென்
> றோதுவதே போதுமதை
> உள்ளுவதே போதுமடா.

சிதம்பர தரிசனத்தின் பின் திருநள்ளாறு சனீஸ்வரன் கோவிலை அடைந்தோம். மகா சிவராத்திரி ஓரிரவில் சப்த திருத்தலங்களில் நடன ஆற்றுகை வழங்கினோம். இந்தியாவில் காரைக்கால் , அம்பகத்தூர், திருவீழிமிழலை, திருநள்ளாறு போன்ற திருத்தலங்களிலும் இலங்கையில் வஜிரா பிள்ளையார் கோவில், புதிய கதிரேசன் கோவில் கொழும்பு நாட்டியாஞ்சலி, மயூரபதி பத்ரகாளி அம்மன் ஆலயம் கைலேஸ்வரம் நாட்டியாஞ்சலி போன்ற கோவில்களிலும் என ஏழு ஆலயங்களில் நாட்டிய சமர்ப்பணம் வழங்கினோம்.



> எங்குமுளான் யாவும்வலான்
> யாவுமறி வானெனவே
> தங்கு பலமதத்தோர்
> சாற்றுவதும் இங்கிதையே

மறுநாள் 9 ஆம் திகதி திருபாலத்துறை பாலைவனநாதர் கோவிலிலும், கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் கோவிலிலும் நடைபெறும் நாட்டியாஞ்சலியில் பங்கேற்று நடனமாடினோம். புராணோத்தமமான தேவாரப் பாடல் பெற்ற இரு சிவாலயங்களிலும் , ஈழத்தில் புராண பெருமை கொண்ட தேவாரப் பாடல் பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருகேதீச்சரம் மீதான பாடல்களுக்கு நடனமாடினோம். திருக்கேதீச்சர அஷ்டகத்திற்க்கான விளக்கத்தினை வழங்கி மக்களிடம் கேதீச்சநாதரை அழைத்துச் செல்லும் போது இந்தியாவில் உள்ள சிவபக்தர்கள் திருக்கேதீச்சரநாதரை மனக்கண்ணில் தரிசித்தனர்.

> சந்ததமு மெங்குமெல்லாந்
> தானாகி நின்றசிவம்
> வந்தெனுளே பாயுதென்று
> வாய்சொன்னாற் போதுமடா.
> தவமொன்று மில்லையொரு
> சாதனையு மில்லையடா
> சிவமொன்றே யுள்ளதெனச்
> சிந்தைசெய்தாற் போதுமடா

10ஆம் திகதி திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம் நீலாயதாக்ஷி திருக்கோவிலில் நாட்டியம் வழங்கி 11 திருத்தலங்களை பூர்த்தி செய்தோம்.மூன்று நாட்களாகத் தொடர்ந்த எம் பயணம் தஞ்சை பெருங்கோவிலில் பெருவுடையார் சந்நிதியில் சரணடைச் செய்தது.

> நித்தசிவ வெள்ளமென்னுள்
> வீழ்ந்து நிரம்புதென்றுன்
> சித்தமிசைக் கொள்ளுஞ்
> சிரத்தை யொன்றே போதுமடா

இம்முறை இந்தியாவில் உள்ள அஷ்ட திருத்தலங்களில் திருக்கேதீச்சர அஷ்டகத்தினை நாட்டிய சமர்ப்பணமாக வழங்கி அறிமுகம் செய்ய சிவனருள் சித்தித்தை எண்ணி வியந்தோம்.

இக்கோவில்களைத் தவிர , சிதம்பரம் நாட்டியாஞ்சலி, தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலய பிரகன் நாட்டியாஞ்சலி , மயிலாடுதுறை மயூர நாட்டியாஞ்சலி, திருவிடைமருதூர்

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்


# இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்

நாம் பாவிகளாயிருக்கையில்
கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே,
தேவன் நம்மேல் வைத்த தமது
அன்பை விளங்கப்பண்ணுகிறார்.
(ரோமர் 5:8)

இயேசுவே! விண்ணிலிருந்து
பூமிக்கு வந்தவரே
பரிசுத்த ஆவியால் பரிசுத்தராய்
பிறந்தவரே
மனுசனை நினைப்பதற்கும்
அவனை
விசாரிப்பதற்கும்

அவன் எம்மாத்திரம்
அற்புதம், அதிசயம்,
இளைப்பாறுதல் அளித்தீரே

பாவத்தின் சம்பளம்
மரணம் என்றீரே
நீதிமானுக்காய் அல்ல
பாவிகளுக்கே
இரத்தம் சிந்துதல் இல்லாமல்
பாவமன்னிப்பில்லை
உம் ஜெபம் எமக்காய்
இரத்தக் கண்ணீராய்
கல்வாரி காட்சி, காயங்கள்,



கசையடிகள்அவமானங்கள்,
நிந்தைகள், வலிகள்

வேதனைகள், கொடூரரின்
சித்திரவதைகள்
அணைக்கும் கரங்களில் ஆணிகள்

நோய்கள் போக்கிட தழும்புகள்
இவர்களையும் மன்னியும் என்றீரே
மரித்து மூன்றாம் நாள்
உயிரோடு எழுந்தவரே
மீண்டும் பரிசுத்தவான்களை
அழைக்க
வருவேன் என்றீரே வாருமையா

மரித்தேன், ஆனாலும்,
இதோ சதாகாலங்களிலும்
உயிரோடிருக்கிறேன்.
(வெளிப்படுத்தல் 1:18)

**கு.வாமினி**
**(Gevelsberg, Germany)**



படம், செய்தி உதவி: சாந்தி தெய்வேந்திரன். பருத்தித்துறை. 20.03.2024

# வெள்ளரிக்காய் ஆயிரம் ரூபாய் விற்றாலும் இயற்கை தடுக்காது!

ஊருக்கு போனபோது ஒரு 102 வயது இளைஞர் ஒருவரைச் சந்தித்தேன். உங்கள் வாழ்க்கையின் இரகசியம் என்ன என்று கேட்டேன்.

நான் எவரிடமும் வேலை செய்யாததும், ஏன் வேலைக்கு போகாததும் என்று வைத்துக் கொள்ளுங்களேன் என்றார்.

அப்படி என்றால் யார் சோறுபோட்டது என்றேன். தம்பி எனக்கு இந்த மண்தான் சோறு போட்டது. இன்று உள்ள பிள்ளைகளுக்கு இந்த மண் பற்றித் தெரியாது. காலை 4 மணிக்கு எழும்பி துலாமிதித்து காலை 10 மணிக்கு வீடு வந்தால் ராஜ வாழ்க்கை. பின் மாலை போனால் சூரியன் இறங்க வீட்டில் நிலவு உதிக்கும்.

உண்டு உடுத்தி உறவுகளுடன் மகிழ்ச்சி பொங்கின மனசு, எவருக்கும் கைகட்டாமல் வாழ இயற்கை தந்த கொடை இந்த மண் என்றார். அப்படி இயற்கை நேரம் காலம் அறிந்து வெளிப்படுத்தும் உதவிக்கரங்களில் இந்த வெள்ளரிக்காயும் ஒன்று. தோட்டத்தில் வெய்யிலின், தாகம் தணிக்க வந்த ஞானப் பழம். இந்த வெள்ளரிக்காய்.

28 ஆம் பக்கம் பார்க்க...



மாதவி



# கருபிக் கடலில் 14 நாட்கள் ஒரே மூச்சில் ஒன்பது தீவுகள்

**1980** களின் வாழ்வை வாழ்ந்து மகிழ்ந்தோம். கைதொலை பேசி கமராவானது. தொலைபேசி பேச மறுத்தது பேரின்பம் தந்தது. மீண்டும் மனிதரோடு நேருக்கு நேர் கதைக்கும் தருணம் ஆனந்தமானது. சூம் zoom களை சுட்டெரித்துவிட்டது வெய்யில்.(30 பாகை)

40 வருட நண்பர்களுடன் அமைந்த பயணம். அன்பு, அரவணைப்பு, விட்டுக் கொடுப்புகள், தேவை அறிந்து நடக்கும் பண்பு இப்படி பல ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டுகொண்டு நடக்க, நட்பின் வலிமை மீள் உயிர்படைந்தது. எனக்கு பொதுவாக நேருக்கு நேர் பழகுவது பிடிக்கும், உலகை இணைக்கிறோம் என்று பக்கம் இருப்பவரை காணாது, கதைக்காது புறம் தள்ளுவதில் ஈடுபாடு குறைவு.

நாம் மட்டுமல்ல கப்பலில் வந்த பயணிகள் யாவரும் புத்தகம் படிப்பதும் கதைப்ப துமாகவே இருந்தார்கள். துறைமுகத்தில் கப்பல் நிற்கும்போது இலவச WiFi





உள்ளது.இருந்தாலும் எவரும் பெரிதாக பாவித்தது கிடையாது. பிள்ளைகளை, பேரப்பிள்ளைகள், இவர்களை விட்டு வந்தாலும், அவர்களுடன் தொடர்பு மிக, மிக குறைவு. என்னை பொறுத்தவரை இல்லை என்றே கூறலாம். பிள்ளைகளை எமது றிமோட்டில் வைத்திருப்பது எவ்வளவு கொடுமை என உணர்ந்த தந்தை நான். (அம்மாமார் இதற்கு எப்பவும் விதிவிலக்கு உண்டு.) இந்த 14 நாட்களும் இன்ர நெற் இல்லாத ஒரு வகை விரதம் போல் இருந்தது. விரதம் பிடித்தால் சொர்க்ம் கிடைக்குமோ என்னமே! அந்த சொர்க்கத்தை நேரில் காணவைத்தது இந்த விரதம்.

அவர்களை அவர்களாக வாழ்விட, நாமும் பழக இந்த 14 நாட்கள் பேருதவி புரிந்தன. எமது பெற்றோர் எம்மைப் போல் பிள்ளைகளை ராச்சர் பண்ணியது கிடையாது. அப்போது எங்கு சென்றாலும் ஒரு post card. தான் பதில்.நம்பிக்கையோடு வாழ்வை வாழ்ந்த காலம். இப்பொழுது அதே காலம் மீண்டும் தற்காலிகமாக என்றாலும், கிடைத்தது மகிழ்ச்சி.

கருபிக் கடலில் அமைந்துள்ள, ஒன்பது தீவுகளுக்கு P&O CRUISES BRITANNIA. கப்பலில் 14 நாள் பயணத்தை மேற்கொண்டோம். இங்கிலாந்தில் இருந்து, பார்படோஸ் தீவுக்கு 9 மணிநேரத்தில் விமானம் மூலம் சென்றடைந்தோம். அங்கிருந்து துறைமுகம் சென்று கப்பல் ஏறினோம். 15 நாட்கள் இன்ரநேற் தொடர்பு இன்றி 1980 களின் வாழ்வை விருப்போடு ஏற்படுத்திக் கொண்டோம்.





அடிமைகள் வாழ்ந்த வீடுகள்

## Barbados. 27.01.2024

'இது நல்ல விவசாய பூமி. தோட்டம் செய்ய இன்று இளையவல்களுக்கு அலுப்பு,' இவ்வாறு எமது பயண வழிகாட்டியின் ஆதங்கத்துடன் ஆரம்பமானது எமது சுற்றுலா. இவ்வாறு முதல் தீவில் கால் பதித்தோம்.

பார்படோசு 15-ஆம் நூற்றாண்டின் பார்படோசு முதல் தடவையாக 1511 இல் எசுப்பானிய நிலவரை படத்தில் காட்டப்பட்டது.1532 முதல் 1536 வரை போர்த்துகல் பேரரசு இத்தீவுக்கு உரிமை கோரியது, ஆனாலும் 1620 இல் அதனைக் கைவிட்டது. ஒலிவ் புளொசம் என்ற ஆங்கிலேயக் கப்பல் இங்கு 1625 மே 14 இல் வந்திறங்கியது. அக்கப்பலில் வந்தவர்கள் இத்தீவை இங்கி




அடிமைகள் வாழ்ந்த வீடுகள்

லாந்தின் முதலாம் ஜேம்சு மன்னருக்காக உரிமை கோரினர். 1627 இல், இங்கிலாந்தில் இருந்து முதலாவது நிரந்தரக் குடியேறிகள் இங்கு வந்தனர். அன்று முதல் இத்தீவு ஆங்கிலேயர் வசமானது. பின்னர் பிரித்தானியக் குடியேற்ற நாடானது. இக்காலகட்டத்தில், தீவின் தோட்டங்களில் பணிபுரிந்த ஆப்பிரிக்க அடிமைகளின் உழைப்பை நம்பி, இந்தக் குடியேற்ற நாடு ஒரு தோட்டப் பொருளாதாரத்தில் இயங்கியது. இத்தீவில் அடிமை வணிகம் 1807 இல் அடிமை வணிகச் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்படும் வரை தொடர்ந்தது. 1833 இல் அடிமை ஒழிப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த ஐந்தாண்டு காலப்பகுதியில் பார்படோசில் அடிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு இறுதி விடுதலை கிடைத்தது.

எமது தாயகம் போன்று, ஈரப்பிலாக்காய், வாழைமரம்,வேப்பமரம், முருங்கை, தென்னை, கரும்பு,என நம்மூர் மரங்கள் பல உண்டு.கரும்பு ஏற்றுமதியாகிறது. விளையாட்டு, கிரிக்கெட், அவர்களுக்கு 2 வது சமயம் என்று டாக்ஸி சாரதி சொன்னது விளையாட்டு மீது அவர்கள் கொண்ட விருப்பக் காட்டியது.

28 ஆம் பக்கம் பார்க்க...







ASJ Asia Shop & Jewelry

பசுமையான மரக்கறிவகைகள், கடல் உணவு மற்றும் சமையலுக்கு தேவையான மளிகைப் பொருட்கள் அனைத்துக்கும் நாடுங்கள்.

பணம் அன்றைய திகதியில் அதி கூடிய பெறுமதியில் இலங்கைக்கு அனுப்ப நாடுங்கள்.

தரமான புதிய டிசைன்களில் தங்க நகைகளுக்கும் என்றும் நாடுங்கள்

Grevener. Str. 222
48159 Münster
Tel : 0251 32709030
0160 5643105

Öffnungszeiten | Montag bis Samstag
9.30 bis 21.00







## நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

# சாத்தப்பட்ட சந்திப்புகள்

நண்பர்களைச் சந்திப்ப தற்காக காடு மலை தாண்டிச் சென்ற நட்பின் கதைகள் இலக்கியங்களில் நிறையவே உண்டு. இயேசுவின் தாய் மரியாள் தனது உறவினரைச் சந்திக்க அறுபது மைல் தொலைவு நடந்து சென்றார் என்றொரு கதை விவிலியத்தில் உண்டு. சந்திப்புகள் உறவின் நெருக்கத்தை பறைசாற்றிக் கொண்டே இருக்கின்றன. சந்திப்புகள் நமது தமிழர் மரபுகளிலும் மிக ஆழமான இடத்தைப் பிடித்திருந்தன.

வீட்டுக்கு வருபவர்களை விழுந்து விழுந்து கவனிப்பதும், தொலைவில் இருப்பவர்களையும் தேடிச் சென்று நலம் விசாரிப்ப தும் நமது மரபுகளாக இருந்தன. கடந்த தலைமுறையினரிடம் கூட அந்தப் பழக்கம் இருந்தது.

கோடை விடுமுறை வந்தால் உடனே மூட்டை முடிச்சுகளுடன் தூரத்தில் இருக்கும் ஏதோ ஒரு உறவினரின் வீட்டுக்குப் போய் வாரக்கணக்கில் தங்கியிருந்து அவர்களில் ஒருவராகவே வாழ்வது நமது வழக்கமாய் இருந்தது.

அடிக்கடி பார்க்கும் நபரைக் கூட,'என்னப்பா பாக்கவே முடியல' என அன்பாய் கோபித்துக் கொள்வதும், நன்றாக கொழுத்திருந்தால் கூட,'என்னப்பா இப்படி இளைச்சு போயிட்டே' என நலம் விசாரிப்பதும் நமது அன்பின் பரிமாற்றங்களாக இருந்தன.

தொழில்நுட்பம் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டு விட்டது. நாகரீக வளர்ச்சி நமது அடிப்படை இயல்புகளையே நீர்த்துப் போகச் செய்துவிட்டது. ஒரு காலத்தில் திண்ணைகளோடு எல்லோரையும் வரவேற்ற வீடுகள் இப்போது இல்லை. பூட்டப்பட்ட கதவுகளும், சாத்தப்பட்ட சன்னல்களும் தான் தெருவெங்கும் நிரம்பியிருக்கின்றன. மக்களுக்கு எதற்கும் நேரமில்லை.

டிஜிடல் தொடு திரைகளின் வழியே அனுப்புகின்ற எமோஜிக்களும், குறுஞ் செய்திகளும், புகைப்படங்களும் போதுமானதாகி விடுகின்றன. ஆண்டுக் கணக்கில் டிஜிடல் உறவில் மட்டுமே இருக்கின்ற மக்கள் பெருகிவிட்டனர். சொல்லப் போனால் ஆயுள் முழுவதும் கூட டிஜிடல் இழைகளோடு வாழ்ந்து மடிந்து விடவும் இன்றைய தலைமுறை தயாராகவே இருக்கிறது.

முன்பெல்லாம் சந்தைக்குப் போனால் நூறு வாய்கள் நம்மை அழைக்கும். விசாரிக்கும். இதை வாங்கலையா, அதை வாங்கலையா என அக்கறையுடன் பேசும். 'காசு என்னப்பா காசு.. அடுத்த வாட்டி வரும்போ குடு' என கொஞ்சமும் தயங்காமல் நமது பைகளில் காய்கறிகளை அள்ளிப் போடும். இப்போதெல்லாம் சந்தைகளுக்குச் செல்வதும், கடை வீதிகளுக்குச் செல்வதும் கூட கணிசமாகக் குறைந்து விட்டிருக்கிறது.





எது வேண்டுமானாலும் ஆர்டர் செய்தால் வீட்டுக்கதவைத் தட்டுகின்றன பொருட்கள். அடுப்பில் பாத்திரத்தை வைத்து விட்டு, ஸெப்டோவில் பால் ஆர்டர் செய்கிறார்கள். குக்கரைக் கழுவிக் கொண்டே அரிசி ஆர்டர் செய்கிறார்கள். எல்லாம் சில நிமிட நேரங்களில் கைகளில் வந்து சேர்கின்றன. பரணிலிருந்து பொருளை எடுப்பதை விட வேகமாய் கடையிலிருந்து நம் வீட்டுக்குப் பொருட்கள் வந்து சேர்ந்து விருகின்றன.

இத்தகைய வசதிகள் நேரடியான சந்திப்புகளுக்கு உலை வைத்து விடுகின்றன. வங்கி ஆப்கள் வந்த பின் யாரும் வங்குக்குச் செல்வதில்லை. ஃபுட் டெலிவரி ஆப்கள் வந்தபின் ஹோட்டலுக்கும் செல்வதில்லை. காய்கறி டெலிவரி வந்த பின் சந்தைக்கும் செல்வதில்லை. ஆன்லைன் வகுப்புகள் வந்தபின் ஸ்கூல்களும் தேவையில்லை. இப்படி இன்றைக்கு ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு நாடாக பிரிந்து கிடக்கின்றன.

சரி, வீடுகளிலாவது எல்லோரும் உறவாக இருக்கிறார்களா என்றால், அதுவும் மிகப்பெரிய கேள்விக்குறி தான். 'மம்மி சாப்பாடு ரெடியா ?' என மகள் மேல் மாடியில் அவளது அறையிலிருந்து வாட்சப் செய்கிறாள். அவளது பூட்டப்பட்ட அறையில் கொரியன் சீரியல் ஓடிக்கொண்டிருக்கிறது. அம்மா சமைத்ததை போட்டோ எடுத்து மகளுக்கு அனுப்புகிறாள்,'எல்லாம் ரெடி கீழ வந்து சாப்டு' என்று! 'டாடி எனக்கு ஒரு பொருள் அமேசான்ல ஆர்டர் பண்ணுங்க' என மகன் இன்னொரு அறையிலிருந்து செய்தி அனுப்புகிறான். அவனது பூட்டப்பட்ட அறையில் அனிமே படம் ஓடுகிறது. எல்லோரும் தனித் தனியாய் ஒரே வீட்டில்

17 ஆம் பக்கம் பார்க்க...

மாதொருபாகன் ஜோதிடம் திருமண சேவை
(ஜேர்மனி)



உங்கள் ஜெனனசாதகம், மற்றும் திருமண பொருத்தம் போன்றவற்றை வாக்கிய பஞ்சாங்க முறைபடி துல்லியமாக எழுதித்தரப்படும்.
மேலும் எமது திருமண சேவையூடாக உங்கள் பிள்ளைகளின் திருமணத்தை சிறப்பாக நிச்சயம் செய்யலாம்.

தொடர்புக்கு: Whatsapp/Viber | +49 15738324103




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வாழ்கிறார்கள். சந்திப்பு தருகின்ற மிகப்பெரிய பரவச நிகழ்வை இன்றைய தலைமுறையினர் இழந்து கொண்டிருக்கி றார்கள் என்பது எத்துணை பெரிய துயரம்! குட்டிச் சுவற்றில் மணிக்கணக்காய் உட்கா ர்ந்து கதை பேசிய காலங்கள் எவ்வளவு அழகானவை. அப்போதெல்லாம் ஒரு வருக்குத் தேவை என்றால் அடுத்தவர் அலறி அடித்துக் கொண்டு வந்து சேர்கி றார். கிணற்றடிகளில், குளத்தங் கரைக ளில், வரப்புகளில், சாலை ஓரங்களில், புளிய மர நிழலில், வீட்டுத் திண்ணைக ளில் என கதைபேசிய காலங்கள் அற்பு தமானவை.

இன்றைய டிஜிடல் உலகில் உறவு என்பது வெறும் தகவல் பரிமாற்றமாகவே இருக்கிறது. நேரடியான சந்திப்புகள், தொடுதல், புன்னகை போன்றவை இல் லாத தொழில்நுட்ப சந்திப்புகள் உயிர ற்ற வெற்றிடங்களாகவே இருக்கின்றன. அதனால் தான் ஒருவருடைய மகிழ்ச்சிக்கு 'வாழ்த்துகள்' என்றும் ஒரு துயரத்துக்கு 'இரங்கல்கள்' என்றும் எந்த வித ஈடுபாடும் இல்லாமலேயே சட்டெனப் பேசிவிட்டுக் கடந்து செல்ல முடிகிறது.

இத்தகைய வாழ்க்கை மாற்றங்கள் தான், தெருவில் அடிபட்டுக் கிடப்பவரைக்

# சாத்தப்பட்ட சந்திப்புகள்



கண்டதும் ஓடிப் போய் உதவுவதற்குப் பதிலாக வீடியோ எடுத்து யூடியூப் ஷார்ட்ஸ் போட மக்களைப் பழக்குகின்றன!

மனிதன் உறவுகளோடு வாழ்வத ற்காக அழைக்கப்பட்டவன். சொல்லப் போனால் மனிதர்களோடு மட்டுமல்ல, விலங்குகளோடும், இயற்கையோடும், இறைவனோடும் இணைந்து வாழப் படைக் கப்பட்டவன். அவன் அந்த இயல்பை விட்டு வெளியேறும் போது தனது அடிப்படை இயல்பையே இழந்து விடுகிறான். சந்தி ப்புகள் வலுவாக இருக்கின்ற குடும்பங்க ளில் பெற்றோர் முதியோர் இல்லங்களுக் குச் செல்வதில்லை. சந்திப்புகள் வலுவாக இருக்கின்ற நட்பில் நிராகரிக்கப்பட்ட நிலையில் யாரும் இருப்பதில்லை. சந் திப்புகள் வலுவாக இருக்கின்ற உறவி னர்களிடையே பந்தங்கள் உடைந்து போய் பல்லிளிப்பதில்லை.

இன்றைய வாழ்க்கைச் சூழல் நமக் கான அபாய மணி! டிஜிடலை ஒதுக்கி வை த்து விட்டு சந்திப்புகளை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்கான அழைப்பொலி. வீட்டில் இருக்கும் அனைவரும் தினமும் ஒரு நேரமாவது ஒன்றாய் அமர்ந்து உணவு உண்பது, ஒன்றாய் அமர்ந்து செபிப் பது, ஒன்றாய் அமர்ந்து கதை பேசுவது என்பதை கட்டாயமாக்க வேண்டும். அந்த நேரத்தில் தொலைக்காட்சி அணைக்கப் பட்டிருப்பதும், செல்போன்கள் வேறோர் அறையில் அடைக்கப்பட்டிருப்பதும் மிக அவசியம்.

வாரம் ஓரிரு முறையாவது நமது தெருவி ல் இருக்கும் ஏதோ ஒரு நண்பருடைய, அல்லது உறவினருடைய வீட்டுக்குச் சென்று வரவேண்டும். தேவையே இல்லா விட்டால் கூட, சும்மா பாத்துட்டு போலாம் ன்னு வந்தேன் என சொல்ல வேண்டும். காரணமே இல்லாமல் ஒரு நண்பரைப் போய் சந்திப்பதில் தான் உண்மையான நட்பு பளிச் என தெரியும்.


மாதம் ஒரு முறையேனும் தொலைவில் இருக்கும் பெற்றோரைச் சென்று பார்க்க வேண்டும். அவர்கள் வாழும் காலத்தில் அவர்களை சென்று சந்திக்கவில்லையே எனும் பேரழுகையின் இதயக் கதறலை அவர்கள் இழந்தபின் கேட்காதிருப்பவர்கள் பாக்கியவான்கள். பெற்றோரைப் போற்றுப வர்கள் வாழ்க்கையை நேசிப்பவர்கள்.

ஆண்டுக்கு ஓரிரு முறையாவது தொலை வில் இருக்கும் உறவினர்களைச் சென்று பார்த்து அவர்களோடு ஓரிரு நாட்கள் தங்கி வருவது உண்மையான உறவுகளை தொடர்ந்து வலுவாய் இயங்கச் செய்யும்.


சந்திப்புகளே உறவுகளுக்கு அடிப்படை. உறவுகளே வாழ்க்கையின் அடிப்படை.

எல்லா சந்திப்புகளையும் அன்பினால் நிரப்புவோம், வாழ்க்கையை முழுமையாய் வாழ்வோம் ■

---







# அழகாக எழுதும் கலை

T.சௌந்தர் (இங்கிலாந்து)

எழுத்துக்களை அழகாக எழுதுவது ஒரு கலையாக கருதப்படுகிறது. அதனை ஆங்கிலத்தில் ஊயடடபைசயிால என்று கூறுகிறார்கள். கிரேக்க மொழியில் Kallos [moF] என்ற சொல்லிருந்து உருவானது என்பர்.

இந்தக்கலையில் அரேபியர்களும், சீனர்களும், ஜப்பானியர்களும் நீண்ட மரபைக் கொண்டுள்ளனர். பேப்பரைக் கண்டுபிடித்த சீனர்கள் துணிகளிலும், பேப் பர்களிலிலும், ஓவியங்களுடன் இணைத்தும் இக்கலையை தொடர்வதைக் காணலாம். குறிப்பாக கவிதைகளை இந்த எழுத்துக் கலையுடன் இணைத்து இணக்கமான எழுத்துச் சித்திரங்களாகவே படைத்து வருகின்றனர்.

ஆனாலும் அரேபியர்கள் இக்கலையில் தனிச் சிறப்புடன் விளங்குகிறார்கள் என்று சொல்வேன்.

ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத் திலிருந்து இக்கலை வளர்ச்சியடைந்தது. காண்பியல் கலையில் [ Visual Art ] - முக்கியத்துவம் பெற்றுவருகின்ற Calligraphy விளம்பரத்துறையில் [ Graph disign ] அதிக பயன்பாட்டில் உள்ளது. அச்சு முறையில் இருக்கும் எழுத் துருக்களை நீட்டி , இழுத்து, வளைத்து எழுதும் முறை எழுத்துருக்கள் மீதான அழகு விளையாட்டு அல்லது நமது இசையில் சுரங்களை இழுத்து ஆலாபனை செய்வ தற்கு இணையானது எனலாம்.

சிறுவயதிலிருந்தே கீறுவதில் ஈடுபாடு கொண்ட நான் வெளிநாடுகளிலிருந்து எனது மாமாக்கள் அனுப்பும் செண்ட், வைன் போத்தல்களில் வரும் எழுத்துக்களை பார் த்து எழுதிப்பார்ப்பதுண்டு. ஆனாலும் நான் கலைக்கல்லூரியில் படித்த போது தான் Calligraphy பற்றிய அறிமுகம் கிடைத்தது.

எல்லாக் கலைகளிலும் மிகுந்த நாட்டமி க்க இந்தியர்கள்- தமிழர்கள் இக்கலையில் அதிகம் நாட்டம் செலுத்தவில்லை என்பது பரவலான உண்மை. பழைய கல்வெட்டுக்க ளில் பெரும்பாலானவை செய்திகளை மட்டும் வெளியிடுபவைகளாக இருக்கி ன்றன.எனது தேடலில் தமிழில் இக்கலை இல்லையென்றே சொல்லலாம் .

சமீபத்தில் கட்டிடக் கலை சம்பந்தமான தேடலில் பல்லவர் காலத்தில் கல்லில் எழு தப்பட்ட சில எழுத்துக்களில் அதை செது க்கிய சிற்பியின் ஆவல் வெளிப்பட்டதை கண்டேன். சமீப காலங்களில் எனது கையெழுத்து போடுவதில் சற்று வேகமான ஓட்டத்தை "த" என்ற எழுத்தை அசை த்து எழுதுவதை நான் ஒரு வேகத்தில் இயல்பாக எழு துகிறேன்.

இதை ஒரு சிற்பி ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே பரீட்சித்து பார்த்ததை பார்க்க வியப்பாக இருந்தது. ■








அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# படைப்புப் போய் 'பண்ணுதலே' வந்துவிட்டது



**பேராசிரியர்**
**சி.மௌனகுரு**
**(இலங்கை)**

சின்ன வயதிலேயே கல்கி ஆன ந்த விகடன் போன்ற. பத்திரி கைகள் தீபாவளி சிறப்பு மலர்களை வெளியிடு வதனைக் கண்டிருக்கிறேன்.. ஆவலோடு வாசித்தும் இருக்கிறேன். சின்ன வயதில். கண்ணைக் கவரும் படங்களோடு கவர்ச் சிகரமாக வெளி வரும் அந்த ஆண்டு மலர்களை எதிர்பார்த்து ஆவலோடு. காத் திருப் போம் வயது அப்படி.

**மலர்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து மகிழ்வோம்**

அதிலே சாதாரண எழுத்தா ளர்கள் பலர் முண்டி யடித்துக் கொண்டு தீபாவளிச் சிறு கதைகள் தீபா வளிக் கவிதைகள் எழுதி யிருப்பார்க்ள். இது எழுதுவதற்கென்றே சில எழுத்தாளர்கள் இருப் பார்கள் காத்தி



ரமான எழுத்தாளர்களும் விமர்சகர்களும் அவர்களைத் "தீபாவளிச் எழுத்தாளர்கள்" எனப். பகிடி பண்ணுவதும் உண்டு.

அப்படி எழுதும் கதைகள் ஒரு கலை ப்படைப்பாக இல்லாமல் செயற்கையாக




அமைவதுண்டு. இயல்பும் அதுவே காத்திரமான எழுத்தாளர்கள் செயற்கையாக ஒருபோதும் எழுதுவதில்லை காரணம் தீபாவ ளிக்கான கதை "பண்ண" அவர்களுக்கு தெரியாது' அவர்களால் முடியாது காரணம் அவர்கள் கலைஞர்கள்

**சிறந்த படைப்பு ஒன்றை**
**உருவாக்குவது**
**ஒரு தவம்**
**ஒரு பெரு முயற்சி**
**ஒரு பெரும் உழைப்பு**
**பெரும் அர்ப்பணிப்பு**
**அது இடையறாது நடை**
**பெற்றுக் கொண்டிருக்கும்**
**ஒரு செயல்பாடு**

சில நாட்களுக்கு முன்னால் முகநூல் முழுவதையும் முற்றாக நிறைத்து கொண்டு இருந்த சிவ ராத்திரி நடன ஆயத் தங்கை-ளையும் தடல் புடல்களையும் காணுகின்ற பொழுது எனக்கு மிக அட்டகாசமாக ஆடம்பரமாக




வெளிவரும் தீபாவளி மலர்களும், சித்திரை புத்தாண்டு மலர்களும், அதில் கதை பண்ணுகின்ற கதை ஞர்களும் தான் ஞாபகம் வருகி றார்கள்

சாதாரண மனிதர்கள் மாத்தி ரமா? பெரியவர்கள் எனப் பேர் வாங்கியவர்களும் உயர் கல்வி நிறுவனங்களும் கூட.

இதைத் தானே செய்கின்றன.

**எல்லாமே**
**விழாவாகவும்**
**வேடிக்கையாகவும்**
**விளம்பரமாகவும்**
**போட்டியாகவும்**
**ஆடம்பரமாகவும்**
**ஆகிவிட்டன**

**ஆத்மார்த்தம்**
**ஆழம்**
**கனதி**
**தரம்**

எல்லாமே குறைந்து விட்டன

படைப்பு போய் "பண்ணுதலே" வந்துவிட்டது.

**விளம்பரமும்**
**தகதகப்பும்**
**ஆடம்பரமும்**
**பிர மிக்கவைக்கலாம்.**

வெகுஜனங்களைக் கேளிக்கை மனமுடையோராய் உருவாக்கலாம் அவை சிறந்த சுவைஞர்களின் உள்ளத்தை தொடுமா?கலை அனுபவம் தருமா.? மனதைப் பரவசப்படுத்துமா? கலை ஒன்றி ப்பை ஏற்படுத்துமா? ஒத்தோடுப வர்களே இன்று அதிகம்அதிகம்.

எதிர்த்த ஓடுபவருக்கு இது. சமர்ப்பணம்

AKSHAYAM Event Catering

AKSHAYAM

உங்கள் மங்கலகரமான வைபவங்கள் எதுவாக இருந்தாலும் நாம் உங்களுக்கு தரமான உணவுகளை அறுசுவை குன்றாது தரக்காத்திருக்கின்றோம்.

பிறந்தநாள் கொண்டாட்டம், திருமணவிழா, பூப்புனித நீராட்டு விழா, கலைவிழாக்கள்

எதுவானாலும் சுவையான உணவுக்கு எம்மை அழையுங்கள்.





அறுசுவை உணவு தயார்


+49 157 54668021 | Akshayam Event Catering |
WhatsApp +49 157 54668021 | Bochum.Germany

அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




# 80/20: உங்கள் வாழ்க்கையை மாற்றும் இரகசியம்
# சிறிய முயற்சியில் பெரிய பலன்கள் கிடைக்கும்

குறைவாக வேலை செய்து அதிகம் சாதிக்க நீங்கள் எப்போதாவது கனவு கண்டிருக்கிறீர்களா? அது ஒரு தொலைதூரக் கனவு போலத் தோன்றுகிறதா? ஆனால், இதைச் சாத்தியமாக்கும் ஒரு கோட்பாடு உள்ளது என்று நான் உங்களுக்குக் கூறினால், நம்புவீர்களா? பரேட்டோ கோட்பாடு (Pareto Principle), அல்லது 80/20 விதி என்று அறியப்படும் இந்த அற்புதமான கொள்கை உங்கள் வேலை வாழ்க்கையை மட்டுமல்ல, உங்கள் முழு வாழ்க்கையையும் புரட்சிகரமாக மாற்ற முடியும். இந்தக் கொள்கையின் சக்தியை அறியவிரும்பினால் தொடர்ந்து படியுங்கள்.




பரேட்டோ கோட்பாட்டின் பிறப்பிடமான பொருளாதாரத்தில் தொடங்குவோம். 19ஆம் நூற்றாண்டில், இத்தாலியப் பொருளியலாளர் வில்ஃபிரெடோ பரேட்டோ கிட்டத்தட்ட 80% இத்தாலியச் செல்வம் 20% மக்களின் கைகளில் இருந்தது என்பதைக் கண்டுபிடித்தார். ஆச்சரியமாக, இந்த விநியோகம் பல துறைகளிலும் பொருந்துகிறது: பல நிறுவனங்கள் கண்டுபிடித்தது என்னவென்றால் அவர்களின் 80% லாபம் சுமார் 20% வாடிக்கையாளர்களிடமிருந்து வருகிறது என்று. குறைவாக லாபம் தரும் 80% வாடிக்கையாளர்கள் மீது நேரம் மற்றும் பணத்தை வீணடிக்காமல், இந்த முக்கிய வாடிக்கையாளர்கள் மீது உங்கள் முயற்சிகளைக் குவிப்பது என்பது அதிக லாபத்தை அளிக்கும்!

தோட்டக்கலையிலும் பரேட்டோ கோட்பாடு பொருந்துகிறது. பல தோட்டக்காரர்கள் கவனிப்பது என்னவென்றால் அவர்களின் அறுவடையின் 80% வெறும் 20% தாவர இனங்களிலிருந்து வருகிறது என்று.

நமது தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில், நாம் செய்யவேண்டிய வேலைகளுக்கு அளவே இல்லாத போல் ஒரு பெரும் பட்டியலை உருவாக்கி வைத்திருப்போம். ஆனால், இந்தப் பணிகளில் வெறும் 20% மட்டுமே உங்கள் 80% வெற்றிக்குப் பங்களிக்கின்றன என்று நான் உங்களுக்குக் கூறினால் நம்புவீர்களா? இந்த முக்கிய பணிகளில் உங்கள் ஆர்வத்தைக் குவிப்பதன் மூலமும், மற்றவற்றை ஒதுக்கிவிடுவதன் மூலமும் அல்லது கவனிப்பதில்லை என்று கருதுவதன் மூலமும் நீங்கள் உங்கள் உற்பத்தித்திறனையும் திருப்தியையும் அதிகரிக்க முடியும்.


Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

சமூகஉறவுகளில்கூடபரேட்டோ கோட்பாடு தெரிகிறது. நமது வாழ்க்கையில் 20% மக்கள் மட்டுமே நமக்கு 80% மகிழ்ச்சியையும் ஆதரவையும் வழங்குகின்றனர். இந்த உறவுகளில் நமது நேரத்தையும் சக்தியையும் முதலீடு செய்வதன் மூலம், நாம் மேலும் ஆழமான மற்றும் திருப்திகரமான தொடர்புகளை உருவாக்க முடியும். நீங்கள் எத்தனை நண்பர்களைக் கொண்டிருக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல, அவை எவ்வளவு அர்த்தமுள்ளவை என்பதே முக்கியம். உடல்நலத்துறையிலும் பரேட்டோ கோட்பாடு அதிசயங்களைச் செய்ய முடியும். பலரின் உடல்நல மேம்பாடுகளின் 80% வெறும் 20% உடற்பயிற்சிகளிலிருந்து வருகிறது. இந்தத் திறனான உடற்பயிற்சிகளில் ஆர்வத்தைக் கொள்வதன் மூலம், அவர்கள் குறைந்த நேரத்தில் சிறந்த உடல்நலத்தை அடைகின்றனர். உடற்பயிற்சிக்கு நேரமில்லை என்று நினைக்கும் ஒவ்வொருவருக்கும் இது இசையாக இருக்கும்!

பரேட்டோ கோட்பாடு வெறும் ஒரு விதி மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை கொள்கை. அது நமது முயற்சிகளை முக்கியமானதில் குவிப்பதைக் கற்றுத் தருகிறது. நீங்கள் ஒரு நிறுவனத்தை நடத்துவதாகவோ, உங்கள் தோட்டத்தைப் பராமரிப்பதாகவோ,உங்கள் உற்பத்தித் திறனை அதிகரிப்பதாகவோ,ஆழமான சமூக தொடர்புகளை உருவாக்கு வதாகவோ,அல்லது உடல் நலத்தை மேம்படுத்துவதாகவோ இருந்தால் – 80/20 விதி உங்களுக்கு வழிகாட்ட முடியும்.

உங்கள் குடும்பத்துடன் அதிக நேரம் செலவிடுவது, உங்கள் ஆசைகளைப் பின்தொடர்வது, மற்றும் உங்கள் வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் அதிக வெற்றியை அடைவதற்கு பரேட்டோ கோட்பாடு உதவுகிறது. இந்த சக்திவாய்ந்த கருவியைப் பயன்படுத்தி, அது உங்கள் வாழ்க்கையை எவ்வாறு சிறப்பாக மாற்றும் என்பதைக் காண நேரம் இது. மாற்றத்திற்கு நீங்கள் தயாரா? அப்படியென்றால், இன்று முதல் பரேட்டோ கோட்பாடு உங்கள் வழிகாட்டியாக இருக்கட்டும்!





## வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் கற்றிங்கன் நகரில்
ஆசிரியையாக பணிபுரியும்
நற்குணம் உள்ள சைவ, வேளாள
குல பெண்ணிற்கு ஏற்ற பட்டதாரி
மணமகனை தற்போதைய
பாடசாலையிலேயே கற்பிக்க கூடிய
தூரத்தில் வரனை எதிர்பார்க்கும்
பெற்றோர்.
தொடர்புகளுக்கு:
4915774318528



மணமகன் தேவை!

யேர்மனியில்
Wirtschafts ingenieurin
ஆக படிப்பை நிறைவு செய்த
35 வயது நற்குணமுள்ள
சைவ வேளாள பெண்ணிற்கு
பொருத்தமான பட்டதாரி மணமகனை யேர்மனியில் எதிர் பார்க்கும்
பெற்றோர்
தொடர்புகளுக்கு:
4915774318528



03 ஆம் பக்கத் தொடர்ச்சி...



# தற்காலிக வெற்றிகளைக் கொண்டாடுவதிலேயே தாயகத்தில் எமது காலம் போகின்றது

# பேரினவாதிகளின் இலக்கும் சிவராத்திரி தின சம்பவமும்

என்று அறிவித்துக் கொண்டு, பௌத்த விகாரைகளை அமைக்க முடியும் என்பதுதான் இப்போதைய நிலை. ஆனால், இது தொல்லியல் திணைக்களத்தின் விதி முறைகளுக்கு முற்றிலும் முரணானது. தொல்லியல் திணைக்களம் என்பது இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் செயற்பட வேண்டிய ஒன்று. ஆனால், இங்கு பௌத்த மயமாக் கலுக்கான பாதைய அமைத்துக்கொடுக்கும் பணியைத்தான் தொல்பொருள் திணைக்களம் செய்கின்றது.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தது என ஒரு பகுதி அடையாளம் காணப்பட்டால், அந்தப் பகுதியைப் பேணிப் பாதுகாப்பதும், எதிர்கால ஆய்வுகளுக்கு உதவுவதும்தான் தொல்பொருள் திணைக்களத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணி. அங்கு ஏற்கனவே இருக்கின்ற கட்டுமானங்கள், சின்னங்களை அகற்றுவதோ அல்லது சேதப்படுத்துதோ அதன் பணி அல்ல. அதேபோல, புதிய கட்டுமானங்களையும் அமைக்க முடியாது. ஆனால், தொல்பொருள் திணைக்களம் அதற்குரிய நடைமுறை விதிகளுக்கும், நீதிமன்றத் தீர்ப்புக்கும் முரணாக இவற்றைத்தான் கடந்த காலங்களில் செய்துவருகின்றது.

வெடுக்குநாறிமலையில் மட்டுமன்றி குருந்தூர்மலையிலும் தொல்லியல் திணைக்களம் இதனைத்தான் செய்தது. நீதிமன்றத்தின் கட்டளை கூட அங்கு செல்லுபடியாகவில்லை. முல்லைத் தீவில் உள்ள குருந்தூர் மலையிலும், படையினரும் ஏனைய அரச கட்டமைப்புக்களும் இந்த பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளின் பின்னணியில் இருந்து செயற்படுகின்றன. அரசாங்கம் தொல்லியல் திணைக்களத்துக்காக ஒதுக்கும் நிதிக்கு மேலதிகமாக, வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் சிங்களவர்கள் இந்தச் செயற்பாடுகளுக்குத் தேவையான நிதியைப் பெருமளவுக்கு வழங்கிவருகின்றார்கள்.

2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், தமிழ்மக்களுடைய தாயகப் பகுதிகளை சிங்கள மயமாக்குவதற்கான உபாயங்களில் ஒன்றாக “தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி” என்ற பிரகடனத்தை அரசாங்கம் பயன்படுத்திவருகின்றது. இதன்மூலம் தமிழ் மக்களின் தொன்மையான பல பகுதிகள் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டு அவற்றை சிங்கள – பௌத்த மயமாக்கும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் இவ்விதம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக ஏற்கனவே அடையாளங்காணப்பட்டுள்ளன. சில இடங்கள் மட்டும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை பௌத்த மயமாக்கும் செயற்பாடுகள் அரச கட்டமைப்புக்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதற்கு ஆதரவாகச் செயற்படாவிட்டால், குறிப்பிட்ட அரச கட்டமைப்புக்கள் துரோகிகளாக முத்திரை குத்தப்படலாம். அதனால், பௌத்த சிங்களத் தரப்புக்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் இதற்கு ஆதரவாகவே இயங்குகளின்றன.

தொல்லியல் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்பாடுகளின் பின்னணியில் சிங்கள புத்திஜீவிகள் பலரும் செயற்படுகின்றார்கள். நீண்ட கால அடிப்படையிலான நிகழ்ச்சி நிரலில் ஒவ்வொரு அங்கம்தான் வெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை போன்றவை. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கதைகளுடன் சிங்கள தேசம் தயாராக இருக்கின்றது. நாடு முழுவதும் புத்தர் சிலைகளை வைத்து நிரப்புவதன் மூலம், இந்த நாட்டின் வரலாற்றை போலியாக எழுதி, பௌத்த சிங்கள நாடாக எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்கும் மகாவம்ச மனநிலையின் விளைவுகள்தான் நாட்டை பாரிய பின்னடைவுக்குள் தள்ளியது. ஆனால், அதிலிருந்து பாடம் படிக்க வேண்டும் என்ற எண்ணம், பௌத்த அடிப்படைவாத சக்திகளுக்குக் கிடையாது. இலங்கையை சிறுபான்மையினர் அல்லாத பௌத்த சிங்கள நாடாக நிறுவிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, எவ்வளவு விலையை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராகிறார்கள். அது வரலாற்று ரீதியாக கடத்தப்பட்டு வரும் மகாவம்ச பௌத்த அடிப்படைவாத மனநிலையில் இருந்து வரும் ஒன்று.

கச்சதீவில் இரகசியமாக புத்தர் சிலை அமைக்கப்பட்டமை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த சின்னமாக அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தமை, நிலாவரைக் கிணற்றடியில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை, வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் அகற்றப்பட்டமை போன்றன தொல்லியல் திணைக்களமும் அதன் ஆதரவு சக்திகளும் தமிழ் மக்களின் தாயகப் பகுதிகளில் முன்னெடுக்கும் ஆக்கிரமிப்புக்கு சில உதாரணங்கள்.

பொருளாதார நெருக்கடி உச்சகட்டத்தில் இருந்த காலத்தில் கூட, குருந்தூர் மலையை ஆக்கிரமிப்பதற்கு தென்னிலங்கையிலிருந்து பெருமளவு பஸ்களில் பௌத்த பிக்குகளும், சிங்கள கடும் போக்காளர்கள் பலரும் முல்லைத்தீவுக்கு வந்தமையை நாம் பார்த்தோம். அதாவது, தமிழர் தாயகத்தை பௌத்த – சிங்கள மயமாக்குவதற்காக என்ன விலையைக் கொடுப்பதற்கும் அவர்கள் தயாராகவுள்ளனர்.

அதேவேளையில், தொல்லியல் திணைக்களத்தை ஆட்சித் தலைவர்களால் கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளது. அங்கு இருப்பவர்கள் எல்லாரும், பௌத்த அடிப்படைவாதத்தை முன்னெடுப்பதற்காக தெளிவாக பயிற்றுவிக்கப் பட்டவர்கள். அதேவேளையில் புத்திஜீவிகள். ஆவர்கள் அரசாங்கத்தின் உத்தரவுகளை ஒரு பொருட்டாகக் கூட மதிப்பதில்லை. ஆட்சியில் இருப்பவர்கள் ஐந்து, ஆறு ஆண்டுகளில் மாறக் கூடியவர்கள். அவர்களை கருத்தில் எடுக்க வேண்டியதில்லை என்ற மனப்பான்மையுடன்தான் அவர்கள் செயற்படுகின்றார்கள்.

அரசாங்கத்தின் தலைவர்களைப் பொறுத்தவரையிலும், தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்படுவது தமது எதிர்கால அரசியலுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என அஞ்சுகிறார்கள். அதனால், தொல்லியல் திணைகளத்தின் அடிமைகளாகவே அவர்கள் இருப்பார்கள்.

தமிழ் மக்கள் இந்த சவாலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதுதான் இன்றுள்ள மிகப்பெரிய கேள்வி. புதிய மகாவம்சத்தை எழுதுவ தற்குத் துடித்துக்கொண்டுள்ள பௌத்த – சிங்கள இனவாதிகள் தமது கொள்கையில் உறுதியாக இருக்கின்றார்கள். பொருளா தார நெருக்கடி மோசமடைந்தாலும், இந்த விடயத்தில் அவர்கள் சமரசத்துக்கு தயாராகவில்லை என்பதைத்தான் சிவராத்தி சம்பவம் உணர்த்துகிறது. ஆட்சி மாற்றம் ஒன்றை நாடு எதிர்கொண்டுள்ள நிலையில், இவ்விடயத்தில் சிங்கள தேசியவாதிகளின் நிகழ்ச்சிநிரலுக்கு எதிராக சிங்களத் தலைவர்கள் யாரும் செயற்படுவார்கள் என்பதும் எதிர்பார்க்க முடியாது. அதனை இலக்காகக்கொண்ட காய்நகர்த்தலாகவே இது உள்ளது!



லூர்ட்ஸ் மாதா புனிதப்பயணம் 2024

May , June, July, August 2024








லூட்ஸ் மாதா கோவில், இத்தாலி, Paduwa, Venedig, போத்துக்கல், Lissabon, Fatima, ஆகிய இடங்களுக்கு May , June, July, Aug, மாதங்களில் பஸ் மூலம் பிரயாணம் செய்ய, ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

முன்கூட்டியே உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: முருகா (K. MURUGA) 0297 27754, 0175 850 1489




# ஆரம்பிக்கலாமா?

## தமிழா தமிழனா?

காலச்சக்கரத்திலே தமிழ் தளைத்தோங்குகின்றது என்பது வெள்ளிடைமலை. உலகில் தோன்றிய மொழிகளில் தமிழே முதலில் தோன்றியது என்பதற்கு ஆதாரங்கள் அதிகமாக இருக்கின்றன. இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக எழுத்திலும் பேச்சிலும் இருக்கும் மொழி. செம்மொழி அந்தஸ்து பெற்றிருக்கின்றது. சிறந்த பல இலக்கியங்கள் தோன்றியிருக்கின்றன. அவை எல்லாம் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய அறநெறிகளைப் போதிப்பனவாக இருக்கின்றன. துறவை எடுத்துரைக்க மணிமேகலை, மண்ணாசையால் ஏற்படும் தீமையை எடுத்துரைக்க மகாபாரதம், கற்புக்குச் சிலப்பதிகாரம், ஆன்மீக அற்புதங்களுக்கு தேவாரம், திருவாசகம், திருவருட்பா இவ்வாறு பல இலக்கியங்கள் தமிழில் தோன்றித் தமிழின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றன. அறநெறி போதித்து மனிதனை நன்னெறியில் இட்டுச் செல்வன. ஆயினும் உலக அரங்கில் தமிழனின் கண்டுபிடிப்புக்கள் எத்தனை? தமிழின் பெருமையயைக் கூறுகின்ற ஊடகங்கள் வடிவமைப்பில் தமிழரின் பங்களிப்பு எப்படி இருக்கின்றது? இவை சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு விடயமாக இருக்கின்றது.

அன்று தமிழைக் கற்றவர்கள் கவிபாடி மன்னர்களிடம் பரிசில்கள் பெற்றுச் சென்றார்கள். கவிபாடிப் பரிசில்களைப் பெற்றவர்களே இலக்கியங்களைப் படைத்தார்கள். சங்ககாலத்தை எடுத்து நோக்கினால், ஐவகை நிலப்பரப்புக்களிலும் வாழ்ந்த மக்கள் அந்த நிலங்களுக்கேற்பத் தொழில்களைச் செய்தார்கள். குறிஞ்சி நில மக்கள், வேட்டையாடுதல் தினை பயிரிடுதல், திணை காத்தல் போன்ற தொழில்களைச் செய்தார்கள், முல்லை நில மக்கள் இடையர்களாகவும், ஆயர்களாகவும் வாழ்ந்தார்கள், மருதநில மக்கள் உழவுத் தொழிலைச் செய்தார்கள், நெய்தல் நில மக்கள் கடற்றொழில் செய்தார்கள், பாலை நில மக்கள் போர்செய்தல், சூறையாடுதல் போன்ற தொழில்களைச் செய்தார்கள்.

தமிழ் நிலப்பரப்புக்களில் வணிகம் இருந்திருக்கின்றது. பண்டமாற்று இருந்திருக்கின்றது. நெய்தல் நில கடலும் கடல் சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் உப்பைக் கொடுத்து நெல் வாங்கி வந்தமை, தமிழ் நாட்டுக்கு யவனர்கள் வந்து மிளகு போன்ற பொருட்களை வாங்கிச் சென்றமை போன்ற ஆதாரங்களை எடுத்துக் காட்டுவன இலக்கியங்களே. நெய்தல் நில மக்கள், மீன்பிடித் தொழிலைச் செய்ததுடன் கடற்கரையில் உள்ள உவர்நிலத்தில் சிறுசிறு பாத்திகள் அமைத்து, அவற்றில் கடல் நீரினையும், உப்பங்கழி நீரினையும் பாய்ச்சி உப்பு விளைவித்ததை நற்றிணைப் பாடலால் அறியக்கூடியதாக இருக்கின்றது.

> "பெயினே விடுமான் உளையின்
> வெறுப்பத் தோன்றி
> இருங்கதிர் நெல்லின் யாணரஃதே
> வறப்பின் மா நீர் முண்டகம்
> தாஅய்ச்சேறு புலர்ந்து
> இருங்கழிச் செறுவின்
> வெள் உப்பு விளையும்"

இவ்வாறு தொழில்கள் செய்தவர்களின் பெயர்கள் இன்று இல்லை. ஆனால், அத்தொழில்களைப் பாடியவர்களின் பெயர்களே இன்றும் நின்று நிலைக்கின்றன. இவ்வாறு தொழில்களை இலக்கியம் மூலமே அறியக்கூடியதாக இருக்கின்றது. அகழ்வாராய்ச்சி மூலம் அறியப்பட்டாலும் இலக்கியங்களே தெளிவாக இவற்றை விளக்குகின்றன. அவ் இலக்கிய கர்த்தாக்களே இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதனாலேயே எல்லாம் அழிந்து போனாலும் புகழ் அழிவதில்லை. எனவே இலக்கியம் படைப்பதனால், பெயரும் புகழும் நிலைத்து நிற்கும் என்பதை அனைவரும் அறிந்திருக்கின்றார்கள். தமிழ் வருமானத்தைத் தருமா? என்ற கேள்வியுடன் உயர்கல்வியை மேற்கொள்பவர்கள் தமிழைத் தவிக்கவிட்டு விடுகின்றார்கள். ஆனால், தமிழ் புகழைத் தரும் என்பதை ஓய்வு நிலையின் போது அறிந்து கொண்டு தமிழைக் கற்று ஆய்வு செய்யத் தொடங்குகின்றார்கள். இதனால், தமிழ் வாழ்கின்றது.



அக்காலத்தில் தமிழ் ஆட்சிமொழியாக இருந்து தமிழ் ஆட்சி செய்த பெருமையை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், அன்று பேசிய தமிழை இன்று புரிந்து கொள்வதற்காக தமிழ் அகராதியைப் புரட்ட வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஏனென்றால், தமிழில் பல மொழிக் கலப்புகள் எற்பட்டிருக்கின்றன. மணிப்பிரவாள நடையிலே பல தமிழ் இலக்கியங்களை அறியக்கூடியதாக இருக்கின்றன. எனவே தமிழின் வளர்ச்சிக்கு மொழிக்கலப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே இருக்கின்றது. நாட்டு மொழிகளுடன் சேர்ந்த போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அந்த மொழிகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை தமிழுக்கு இருக்கின்றது என்பதை இதற்கு முன் ஒரு கட்டுரையில் வெற்றிமணியில் எழுதியிருந்தேன்.

புகழைத் தருகின்ற எத்தொழிலையும் மேற்கொள்ளலாம். அது இசையாக இருக்கலாம், கலையாக இருக்கலாம். ஆனால், தாய்மொழி ஓய்வு நிலையிலும் கற்கக் கூடியது. அதனால், தமிழின் மேல் தற்போது உலகநாடுகளில் அலாதியான பிரியம் ஏற்பட்டிருக்கின்றது. மொழி என்பது ஒருவருக்கொருவர் தம்முடைய எண்ணக் கருக்களைப் புரிந்து கொள்ளப் பயன்படுத்தும் ஒரு ஊடகமே என்னும் அடிப்படைக் கருத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். திருக்குறளைப் படைத்த திருவள்ளுவர். தற்காலத்தில் எழுதப்பட்ட எதுவுமே புரியாது முழிப்பார் என்பது நிச்சயம். ஏனென்றால், அன்று எழுத்து வழக்கில் இருந்த தமிழ் இன்று இல்லை. அதுவும் கணினி யுகத்திலே கணினி புரிந்து கொள்ளும் மொழியையே தமிழர்கள் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஐ என்னும் எழுத்தை அய் என்றும் பயன்படுத்தலாம். ஔவை என்பதை அவ்வை என்று எழுதலாம். கோயில் என்பதைக் கோவில் என்று எழுதலாம் என மொழித் திரிவு கையாளப் படுகின்றது.

தமிழின் பெருமையை நாம் அறிந்தோம், அறியச் செய்கின்றோம். ஆனால், தமிழன் என்னும் பெருமையை நிலைநாட்டுவதற்கு அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் எமது சிந்தனையைச் செலுத்துவதற்கு நாம் உழைக்க வேண்டும். அந்தத் துறைகளிலே கற்றவர்கள். அதிலே மேலும் என்ன சாதனை செய்யலாம் என்று ஓய்வுநிலையிலும் சிந்தித்துச் செயற்பட்டால், தொழில்நுட்பத்திலும் தமிழன் பெயர் பேசப்படும். வெளிநாட்டு மோகம் புதியதல்ல. அன்றும் மேல்நாட்டு இசையைப் பின்பற்றித் தமிழ் சினிமா பாடல்கள், நடனம் போன்றவை சினிமாவிலே இடம்பெற்றன. ஆனால், இன்று பிரமாண்டம் என்று மேல்நாட்டார் தொடங்கிய Marvel படங்கள் இன்று தமிழ் சினிமாவிலே கொடிகட்டிப் பறக்கின்றன. இசைகளும் ஏதோ ஆங்கில இசையைப் போன்று காதுகளுக்குள் நுழைகின்றன. தற்போது 10 வருடங்களுக்குள் பல மேல்நாட்டினரின் கண்டுபிடிப்புக்களுக்கும் தமிழ்ப் பெயர்கள் வந்திருக்கின்றன.

28 ஆம் பக்கம் பார்க்க...






# ஒரு கிராமத்தின் மேம்பாட்டில் ஓர் ஆசிரியரின் பங்கு

ரூபன் சிவராஜா
(நோர்வே)

**வே. இராமர் எழுதிய ‘எமது கிராமத்தின் வரலாறு‘ - கைதடி, நாவற்குழி தெற்கு!**

இந்நூல் நோர்வேயில் வசிக்கின்ற சமூக செயற்பாட்டாளரும் யாழ் இணைய நிறுவனருமான மோகன் இராமர் அவர்களின் தந்தை, வே. இராமர் வாத்தியார் தனது கிராமம் பற்றி எழுதிய நெடுங்கட்டுரையையும் அவரது சமூகப்பணிகள் குறித்து அவரை அறிந்த ஆளுமைகள் எழுதிய பதிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. கடந்த ஆண்டு அவர் காலமானார். அவரது முதலாம் ஆண்டு நிறைவில் நூலினை அவரது குடும்பத்தினர் வெளியிட்டுள்ளனர்.

இராமு வாத்தியார் ஆசிரியராக, அதிபராக கல்விப் பங்களிப்பினை மட்டுமல்லாது, கைதடி நாவற்குழி தெற்கு கிராமத்தினை சமூக, பொருளாதார, கலை, பண்பாடு, மனித வள அபிவிருத்தி எனவாகப் பல தளங்களில் கட்டமைக்கவும் வளர்த்தெடுக்கவும் முன்னின்று உழைத்திருக்கின்றார்.

தன்னனுபவ எழுத்தாக இந்நூல் இரண்டு அம்சங்களைப் பதிவுசெய்கின்றது. அடிப்படை வசதிகள் குன்றியிருந்த ஒரு கிராமம் எவ்வாறு படிப்படியாக மேம்பாட்டை நோக்கி நகர்ந்தது என்பது முதலாவது. அதன் கிராம மேம்பாட்டில் இராமர் வாத்தியாரின் பங்களிப்பு உட்பட்ட ஏனைய சமூக செயற்பாட்டாளர்களின் பங்களிப்பினையும் பதிவுசெய்கின்றது. அதனூடாக ஒரு கிராமத்தின் வரலாற்றினை ஆவணப்படுத்துகின்றது. கிராமத்தில் நிலவிய சாதிய வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகளைக் களைவதற்கும் சமூகநீதி




சார்ந்த நல்லிணக்கத்திற்கும் இராமர் வாத்தியார் செயற்பட்டுள்ளார் என்பது அவர் மீது எனக்குப் பெருமதிப்பினை ஏற்படுத்துகின்றது. இந்த இணைப்பு நூலுக்குரிய இணையத்தளம். பதிவுகளைத் தனித்தனியாகவும், மின்நூலாக (pdf) தரவிறக்கம் செய்தும் வாசிக்கலாம்:

**https://raamu.vaathiyaar.blog/**

மோகன் அவர்கள் யாழ்.கொம் (Yarl.com இணையத்தளத்தின் நிறுவனர். புலம்பெயர் தமிழ்ச் சூழலின் இணையத் தளங்களில் முன்னோடியானது அது. இன்றைய சமூக ஊடகங்களின் வருகைக்கு முந்தைய நிலையென இணையத் தளங்களின் ஊடான chatting எனப்படுகின்ற நிகழ்நேர உரையாடல், தகவற்பகிர்வுகளையும் கருத்தாடல்களையும் குறிப்பிடலாம். இணையவெளியில் புலம்பெயர் / உலகத் தமிழர்களுக்கான கருத்துப்பகிர்வுத் தளமாகவும் யாழ் இணையம் 1998 களின் ஆரம்பத்திலிருந்து இருந்துள்ளது. ஆர்வமுள்ள எவரும் எழுதலாம், கருத்துகளைப் பகிரலாம் என்ற நிலைக்கு வித்திட்ட தளங்களில் யாழ் இணையத்தின் இடம் தனித்துவமானது. செய்திகள், தகவல்கள், கட்டுரைகள் ஆய்வுகள், கதைகள், கவிதைகள், பகிர்வுகள், ஓவியங்கள் எனப் பல்வகையான ஆக்கங்களுக்கான தளமாக விளங்குகின்றது.

புலம்பெயர் சூழலில் எழுத்தாளர்களாக உள்ள பலரின் ஆரம்பக் களமும் தளமுமாகவும் யாழ் இணையம் திகழ்ந்திருக்கின்றது. இணையத் தளங்கள் புற்றீசல் போல் உருவாகுவதும் சில காலங்களில் முகவரியே இல்லாமற் போவதும்தான் தமிழ்ச்சூழலில் அதிகம்.

ஆனால் இத்தனை ஆண்டுகள் அதனைத் தொடர்ச்சியாகவும் நேர்த்தியாகவும், கால மாற்றத்திற்கேற்ற மறுசீரமைப்பு களோடும் இயக்கி வருவதென்பது சாதாரண விடயமல்ல. இந்த ஆண்டு யாழ் இணையம் இருப்பத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.




---

# கவிஞரும் எனது அம்மாவும் அற்புதமான தருணம்

மு.க.சு.சிவகுமாரன்

வெற்றிமணி மாணவர் சஞ்சிகையாக இலங்கையில் 1950 ம் ஆண்டு நாவலப்பிட்டியில் எனது தந்தை அமரர் அதிபர் மு.க.சுப்பிரமணியம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அன்று





முதல் அவர் மறையும் வரை அம்மா (அமரர் நவநிதியம் சுப்பிரமணியம் அவர்கள்) யாவற்றுக்கும் உற்றதுணையாக இருந்தார். சஞ்சிகை வெளிவந்த காலத்தில் கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் என் தந்தையின் நண்பரானார். பல பயனுள்ள மாணவர் கட்டுரைகளை வெற்றிமணியில் எழுதினார்.

எனது அம்மா கவிஞரின் புத்தங்கள் கவிதைகள் பேச்சுக்கள் என, யாவற்றையும் விரும்பி படிப்பார்,கேட்பார். கனடாவில் அம்மா வாழ்ந்த காலத்தில் கவிஞரின் ‘கவிநாயகம் வாழ்வும் வரலாறும்‘ நூல் வெளியீட்டு மகிழ்வுடன் கலந்துகொண்டார்.




அற்புதமான அத்தருணம் இங்கே. எனது அம்மாவின் பிறந்த நாளில் 11.03.2024 இல் கவிஞர் மறைந்தார்.கவிதைகள் மறைவின்றி வாழும்.

BOCHUM நகரில்...

LOTO LADEN விற்பனைக்கு உண்டு

யேர்மனியில் Bochum நகரில் Rewe Markt இல் உள்ளே அமைந்துள்ள Lotto Laden விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.







தொடர்புகளுக்கு: 0234-2399032



# தேவை ஒரு கண்ணாடி



**நான்** வடிவோ வடிவில்லையோ என்று உண்மையிலேயே எனக்குத் தெரியவில்லை. நேற்றிரவு நான் எனது படமொன்றை Facebook இல் போட்டுவிட்டுப் படுத்து விட்டேன். இன்று காலையில் எழுந்து பார்த்த போது அந்தப் படத்துக்கு முந்நூறுக்கு மேல் லைக்ஸ். நூறுக்கு மேல் கொமென்ற்ஸ். உள் பெட்டியில் ஊருப்பட்ட செய்திகள். ‘வடிவு, நீங்கள் நல்ல வடிவு“ உங்களோடை கதைக்கோணும். போன் நம்பரைத் தாங்கோ“உங்களுக்கு ஒண்டு சொன்னால் கோவிப்பிங்களோ? நீங்கள் நல்ல வடிவு“உங்கடை வடிவாம்பிகை என்ற பெயரைப் போலயே நீங்கள் வடிவா இருக்கிறிங்கள்“மடம், பிளீஸ் போன் நம்பர் தாங்கோ“அக்கா, ஐ லவ் யூ”

இப்படித்தான் அந்தச் செய்திகள் என்னை மயக்கும் எண்ணத்தில் எழுதப்பட்டிருந்தன. நான்வுநநயெபந இல் இருந்திருந்தால் அப்படியே பாசியில் வழுக்கி விழுவது போல வழுக்கி விழுந்து பிடரியை உடைத்திருப்பேன். நல்ல வேளையாக அதை எப்போதோ கடந்திருந்தேன்.



சிலர் நல்ல அழகான கவிதைகள் கூட எழுதியிருந்தார்கள். இன்னும் சிலர் நான் முதலே வாசித்த வேறு யாருடையதோ கவிதைகளை தங்களது கவிதைகள் போல எழுதியிருந்தார்கள். எல்லாம் என் வடிவையும் அதனால் அவர்களுக்கு என் மேல் எழுந்த காதலையும் வைத்துத்தான். அதுதான் எனக்குக் குழப்பமாக இருந்தது.


வீட்டில் சண்டை வருகிற பொழுதெல்லாம் வடிவில்லாத என்னை தனது தலையில் கட்டி விட்டதற்காகவும் எனக்கு ஹவடிவாம்பிகை என்ற பெயர் வைத்ததற்காகவும் எனது கணவர், ஊரிலிருக்கும் எனது அம்மாவைத் தாறுமாறாகத் திட்டித் தீர்ப்பார். ‘உன்ரை மூஞ்சைக்கும் முகரக் கட்டைக்கும் இந்தப் பெயரொன்றுதான் குறை” என்றும் சொல்லிக் கத்துவார். உண்மையில் எனக்கு வடிவாம்பிகை என்று பெயர் வைத்தது அம்மா இல்லை. அம்மாச்சிதான் நான் பிறந்த உடனேயே எனது வடிவைப் பார்த்து விட்டு ஹவடிவாம்பிகை என்ற பெயர் வைத்தாவாம். நான் இதைக் கனதரம் எனது கணவருக்குச் சொல்லி விட்டேன். ஆனாலும் மறந்து போனது மாதிரித் திரும்பத் திரும்ப அம்மாவைத் திட்டிக் கொட்டிக் கொண்டிருப்பார். நான் நினைப்பூட்டினால் ‘காகத்துக்கும் தன்ரை குஞ்சைப் பார்த்தால் வடிவாத்தான் தெரியும்’ என்று சொல்லி, கெக்கட்டம் விட்டுச் சிரிப்பார். அது மட்டுமே? வேறு பெண்களிடம் அவர் அசடு வழிகிற பொழுதெல்லாம் நான் கேட்டால் ‘நீ வடிவா இருந்தால் நான் ஏன் வேறையாரையும் பார்க்கப் போறன்?’ என்பார்.

நான் ஓடிப்போய் நான் வடிவோ அல்லது இவர் சொல்லுறது மாதிரி உண்மையிலேயே வடிவில்லையோ என்று கண்ணாடியில் பார்த்தேன். அந்த நேரம் பார்த்துத் தான் அந்த அழைப்பு வந்தது. யாரோ Facebook மெசஞ்சரின் ஊடாகத்தான் அழைக்கிறார்கள் என்பதைச் சத்தத்தின் மூலம் உணர்ந்து கொண்டேன். சாதாரணமாக நான் மெசஞ்சர் அழைப்பென்றால் பேசாமல் விட்டு விடுவேன். ஆனாலும் ஓடி வந்து யாரென்று பார்த்தேன்.

நம்பவே முடியவில்லை. டொக்டர் சுதர்சனின் அழைப்பு அது. டொக்டர் சுதர்சனை உங்களுக்கும் எப்பிடியும் தெரிஞ்சிருக்கும். சரியான நல்ல மனுசன். முள்ளிவாய்க்கால் பிரச்சனை நடக்கிற போது சுவிசிலிருந்து அங்கேயே போய் நின்று பாதிக்கப்பட்ட சனங்களுக்கு மருத்துவ சிகிச்சை செய்தவர். யாருக்குத் தான் அப்படியொரு துணிச்சலும், சேவை மனப்பான்மையும் வரும். அதுவும் அந்தப் போர் நேரம், உயிரைப் பணயம் வைத்து அங்கேயே நின்று“

எனக்கு பயங்கர ஆச்சரியமாக இருந்தது. அவர் ஏன் எனக்குப் போன் பண்ணுகிறார்?

இரண்டு கிழமைகளுக்கு முன்னர்தான் என்னோடு Facebook இல் நட்பா னவர். அவரின் நட்புக்கான அழைப்பு வந்த உடனேயே கொஞ்சமும் யோசி க்காமால் நான் யஉஉநிவ பண்ணி விட்டேன். இப்படியான ஒரு ஆளோடு நட்பாயிருப்பது எவ்வளவு பெரிய விசயம். பெருமையும் கூட. அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு விருது கூடக் கொடுத் திருக்கிறார்கள்.






**சந்திரவதனா**
(யேர்மனி)

நான் தயக்கமில்லாமல் தொலைபேசியை எடுத்து “வணக்கம்“ என்றேன். அங்கிருந்தும் “வணக்கம்“ வந்தது “நீங்கள் டொக்டர் சுதர்சன் தானே?“ “ஓமோம், அவரேதான்“ “உங்கடை சேவையளைப் பற்றியெல்லாம் அறிஞ்சிருக்கிறன். உண்மையிலேயே நீங்கள் பெரிய ஆள். உங்கடை நல்ல மனசை எப்பிடிப் பாராட்டிறதென்றே எனக்குத் தெரியேல்லை“ அவர் பதிலுக்குச் சிரித்தார். “எனக்கு உங்களோடை கதைக்கக் கிடைச்சது பெரிய சந்தோசமா இருக்கு. அது சரி, ஏன் என்னைத் தேடி, போன் பண்ணினனீங்கள்?“ “நான் அங்கை உங்களிட்டை வரோணும். உங்களிட்டைத் தங்கோணும்“ “ஏன் இங்கையும் ஆருக்கும் ஏதும் உதவி செய்யப் போறிங்களோ?“ “ம்.. ம்.. அங்கை வந்திருந்துதான்

30 ஆம் பக்கம் பார்க்க...


## மகாரிஷி கேரளா ஆயுர்வேத மருத்துவம்






குருஜீ Dr.PL. ஜெஜாபதி | 01521 69 611 80

(இலவசமாக நாடி பார்த்து உங்கள் அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்படும்.)


நாங்கள் ஆதிவாசி மக்கள்.எங்கள் குலத்தொழில் மூலிகை வைத்தியம். கடந்த 5 தலைமுறைகளாக பரம்பரை மூலிகை வைத்தியம் செய்து வருகிறோம் நாடி பார்ப்பதில் மிகவும் கைதேர்ந்தவர். குருஜி Dr.PL. ஜெஜாபதி அவர்கள்.எங்களிடம் 361 வகையான வியாதிகளுக்கும் மூலிகை வைத்தியம் அளிக்கப்படுகிறது.ஒரு முறை நம்பிக்கையாக வாருங்கள் மனநிறைவுடன் செல்வீர்கள்.1 வாரத்திற்குள் குணம் தெரியும் ; 100% உறுதி.



ஆஸ்துமா, ஆண்மைகுறைவு, மாதவிடாய் பிரச்சனை, தோல்வியாக, குழந்தை பாக்கியம், கைகால் மூட்டு வலி, ஜவ்வு தேய்மானம், மூலம் வியாதி, பக்கவாதம், அல்சர், உடல் எடை அதிகரிக்க குறைக்க, உயிர் அணுக்கள் கூடுதல், ஆண்மை வீரியம் அதிகரிக்க, நரம்பு தளர்ச்சி, கிட்னி கல், தீராத கை கால் வலி நடுக்கம்.

ஆகிய அனைத்து வியாதிகளுக்கும் சிறந்த முறையில் நிரந்தர மூலிகை வைத்தியம் அளிக்கப்படும்.





## வெற்றிமணி திருமண சேவை




யேர்மனியில் வசிக்கும்
Qualifizierte Realschulabschluss
கல்வித் தகமையுள்ள
31 வயது நிரம்பிய சைவ வேளாளர்குல
ஆணுக்கு ஏற்ற மணமகளைத்
தேடுகின்றோம்.
தாயகத்தில் வசிப்பவர்களும்
தொடர்பு கொள்ளலாம்.
பெற்றோர் மட்டும்
தொடர்பு கொள்ளவும்;
தொடர்கொள்ள வேண்டிய
இல.004917634600734


ZEE தமிழ்
EPICMONKEYS
PROUDLY PRESENTS
EPIC MONKEYS
TITLE SPONSORS
AJ ENTERTAINMENT
NANDY'S Curry & more
Bazaa MARKETPLACE
ச ரி
க ம
ப
LI'L CHAMPS
EUROPEAN TOUR
EHS EVENTHALLE SCHWELM
EISENWERKSTRAßE 4A/C
58332 SCHWELM
APRIL
20
POWERED BY
tamil.de
portal • lifestyle • entertainment
SPONSORS
VV Ponniah
TTS BROTHERS
Sweet Chilli
TT BOX
KANTHAN
ADS BESTFOODS
NIORRA
APIRAAMI
PHOTOGRAPHY
TECH PARTNER
HRA EVENTTECHNIK
MAKEUP PARTNER
Ramya
DIGITAL PARTNERS
IBC தமிழ்
Lankasri
MEDIA PARTNERS
வெற்றிமணி
அகரம்
ETR
KOLLYWOOD KINO
தமிழ் டைம்ஸ்
FOR ALL INFORMATION, CALL +49 1512 7990990

# அமரர் கவிஞர் வி.கந்தவனம் அவர்களுக்கு வெற்றிமணி, யேர்மனி வாழ் இலக்கிய நண்பர்கள் சார்பில் அஞ்சலி செலுத்தியது









கவிநாயகர் வி.கந்தவனம் ஐயா அவர்களது இறுதி கிரிகைகள், கடந்த மாதம் 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் ரொறன்ரோ மாநிலத்தில், இடம்பெற்றது. அமரர் வி. கந்தவனம் ஐயா அவர்களது உடல் மக்களின் இறுதி வணக்கத்திற்காக 16.03.2024,அன்று ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு கவிஞருக்கு தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். அன்றையதினம் சட்டத்தரணி மனுவல் யேசுதாசன், அவர்களின் நெறிப்படுத்தலில் அஞ்சலியும், உரைகளும், இடம் பெற்றன.

சங்கீதபூசணம் பொன். சுந்தரலிங்கம் அவர்கள் தேவாரப் பதிகங்கள் பாடி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து, திரு மனுவல் யேசுதாசன் அவர்கள்,அமரர் கவிஞர் வி.கந்தவனம் அவர்கள், கனடாவில் ஆற்றிய பணிகள் பற்றிக்கூறினார்.

திரு.கதிர்.துரைசிங்கம் அன்னாரின் ஆத்மா சாந்திக்கு பிரார்த்தனை செய்ததுடன்,கவிஞர் அவர்களின் தமிழ் தொண்டையும், அவருடன் உண்டான நட்பையும் எடுத்தியம்பினார்.

யேர்மனியில் இருந்து கலந்து கொண்ட வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் தனது உரையில், கவிஞர் அவர்களின் தமிழ் பற்றினை எடுத் துரைத்தார். யேர்மனிவாழ் இலக்கிய நண்பர்கள், சார்பாகவும் அஞ்சலி செலுத்தினார்.

கவிஞர் தாயகத்திலும்,கனடாவிலும் ஆற்றிய தமிழ் பணிகள் நீங்கள் அறிந்ததே. கவிஞர் யேர்மனி வாழ் தமிழ் மக்களின் இனிய இலக்கிய நண்பராக, வலம் வந்தவர் என்ற செய்தியை உங்கள் இடத்தில் பகிர விரும்புகிறேன். யேர்மனியில் தமிழர்கள் ஒரு மாநிலத்தில் இங்குபோல் இலட்சக்கணக்கில் வாழ இல்லை. பரந்து தூரத் தூர பல இடங்களிலும், மாநிலங்களிலும் வாழ்கின்றார்கள்.

கவிஞர் 1995 ஆண்டு முதல் முதலாக வெற்றிமணி பத்திரிகையின் முதலாவது ஆண்டு விழாவில் யேர்மனியில் கலந்து சிறப்பித்தார். நாம் வெற்றிமணி விழாவினை கவிஞர் அவர்களின் மணிவிழாவாகக் கொண்டாடினோம். அதனைத் தொடர்ந்து பல வருடங்களாக பல விழாக்களில் கலந்து சிறப்பித்தார்.

பெரிய, சிறிய அமைப்புகள் என்ற பேதம் இன்றி தமிழ் எங்கள் உயிருக்கு மேல் என்று யாவரையும், தமிழால் இணைத்து மகிழ்ந்தார். 2002ம் ஆண்டு யேர்மனியில் கவிஞர். வி.கந்தவனம் என்ற நூலை அங்கு வெளியீடு செய்யும் அளவிற்கு, அவரது பணிகள் அங்கும் விரிந்து கிடந்தன. இன்று எம்மை விட்டுபிரிந்தாலும் அவர் பணிகளையும் தொடரும் ஒரு சந்ததியாக இளையவர்கள், இருப்பார்கள் எனக் கூறி தனது அஞ்சலியை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கனடா, தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம், ஒன்ராறியோ பாராளுமன்ற உறுப்பினர் திரு லோகன் கணபதி, உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம், தாய்வீடு பத்திரிகை ஆசிரியர் திலீப்குமார் இன்னும் பல இலக்கிய நண்பர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார். தமிழ் எங்கள் உயிருக்கு மேல் என்று வாழ்ந்த கவிஞரின் உடல் 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை 11.30 க்கு தீயினில் சங்கமமாகியது.




## வானேகியும் தமிழ் படைப்பார்



கவிஞர் வி.கந்தவனம்

ஈழத்தில் இலக்கியத்தில் இன்னும் கவிப்புலத்தில்
ஈடில்லா பெயர்பெற்ற ஆளுமையே கவிநாயகமே!
ஆழத் தமிழ் படித்து ஆக்கியவை வாழு மிங்கே
ஆன்றோர் அரங்குகளை அலங்கரித்த பேராளர்
நாளும் பொழுதும் பலதுறைகள் பயின் றுயர்ந்து
நாட்டில் வாழுங்கால் ஆசான் அதிபரெனப் பலதும்
காலப்பணி செய்த கந்தவனப் புலவர் இன்று
கனடாவில் காலமானர் தமிழுக்கு காலமாவார்
புலம்பெயர்ந்து கனடாவில் தமிழ் வளர்த்தார்
புதுப்புது வடிவங்களில் பல படைத்தார்
பழம் பெரும் இலக்கணத்தோர் வரிசைகளில்
பாதிப்பை தந்த உயர் படைப்பாளி கந்தவனம்
இளந்தலை முறையினர் இவர் வழி பற்றிட
இயன்றதை ஆற்றிடும் இன்முகப் பெருந்தகை
நிலமது குரும்பசிட்டி நீள்புகழ் பெருமையில்
நிலைபெறும் கவிநாயகர் எம் தலைமுறை ஆனவர்
உறவுகள் பேணுவார் உண்மையாய்ப் பழகுவார்
உள்ளத்தில் உள்ளதை உரியதை உரைப்பவர்
கரவுகள் கொள்ளாது கலைகளை வளர்க்கும்
கலைஞர்கள் வரிசையில் இவருமோர் பண்பினர்
திறமைகள் எத்தனை திறம்பட ஆங்கிலம்
தரப்பல படைப்புகள் மொழி பெயர்ப்பாக்கியோன்
சிறப்புடன் கனடாமண் மதித்திவர் புகழினை
சீர்பெறக் "கலாநிதி" பட்டமும் வழங்கினார்
வாணி வாரணன் வளம்பெற வளர்த்தவர்
வருங்காலம் தவமணி எனக் கரம் பிடித்தவர்
ஏணியாய் இருந்து தமிழ் இலக்கியம் படைத்தவர்
எல்லோரையும் சமமெனப் பழகி வரவேற்பவர்
பாணிகள் புதியதாய்ப் பலபடைப்புகள் தந்தவர்
பக்தியாய் இறையினைப் போற்றித் துதித்தவர்
வானேகிச் சென்றாலும் விடுவாரோ தமிழினை
வாழ்வார் எம் நினைவினில் கந்தவனப் பெரியார்

கவிஞர் த.ஐங்கரன் – குரும்பசிட்டி




28.10.1933 - 11.03.2024

## அமரர் கவிஞர் வி.கத்தவனம் அவர்களுக்கு வெற்றிமணி பத்திரிகையின் இதய அஞ்சலி

**வெற்றிமணி ஸ்தாபகர் ஆசிரியர் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் உற்ற நண்பரும், அன்று முதல் இன்று வரை வெற்றிமணி பத்திரிகையில், மாணவர்களுக்கான சிறந்த கட்டுரை, கவிதைகளை விதைத்தவருமான கவிஞர் வி.கந்தவனம் ஐயா அவர்களது மறைவு தமிழர்களுக்கு பேர் இழப்பாகும்.**

வெற்றிமணி யின் தாரகமந்திரம் 'தமிழ் எங்கள் உயிருக்கு மேல்' என்று
யேர்மனியில் 1994 ம் ஆண்டு முதலாவது
இதழில் முத்திரை பதித்தவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

வெற்றிமணி யேர்மனி. 11.03.2024



கவிஞர் வி.கந்தவனம்

அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# காதல் கடை

**எங்கள் எல்லாருக்கும் சுழற்றித் திரிஞ்ச காலத்தில ஒண்டிறதுக்கு எண்டு ஒரு சைக்கிள் கடை இருந்தது.**

மண்ணெண்ணை, பெற்றோல் வித்தவனும், சைக்கிள் வித்தவனும் முதலாளியா மாறின காலம் அது, அதே பவுசு மோட்டச் சைக்கிள் சைக்கிள் திருத்திற ஆக்களுக்கும் வந்திச்சுது.

பவுண் வித்து பாண் வாங்கின நிலமை அப்ப. ஆசுபத்திரிக்கு போறதை கூட அடுத்த மாசம் தள்ளிப்போட்டிட்டு ஓடிறதுக்கு ரெடியா உடுப்பெல்லாம் கட்டி வைச்சிருந்த காலம். எல்லாருக்கும் அடிக்கடி அவசரத்துக்கு இடம்பெயர்ந்து ஓடிப்போக ஒரே போக்குவரத்து சைக்கிள் எண்ட படியால் மருந்துக்கடையிலும் பாக்க இருக்கிற ஒரே வாகனமான சைக்கிள் கடைக்கு உடன ஓடிப் போய் காட்டின நிலமை இருந்த நாட்கள் அவை. மோட்டச் சைக்கிள் பேருக்கு ஏத்த மாதிரி மோட்டுச் சைக்கிளாத்தான் இருக்கும் ஒரு நாள் ஓடினா ஒரு கிழமை கராஜ்ஜில இருக்கும்.

ஆட்டிறைச்சிக்கடையில ஒண்டும் மிச்சம் இல்லாமல் காலில இருந்து தொங்கிற வால் வரை வித்து முடிக்கிற மாதிரி, சைக்கிள் கடையிலேம் கிழிஞ்ச ரயர், நசிஞ்ச rim, அறுந்த chain எண்டு எல்லாம் சொல்லிற விலைக்கு " விருப்பம் எண்டால் வாங்கு" எண்டு வித்த நிலமை இருந்திச்சுது.

திடீர் திடீரெண்டு இந்தா வெளிக்கிடிறன் எண்டு கோட்டையில இருந்து அடிக்கிற செல்லுக்கு ஆக்கள் கொஞ்சம் முதல் ஓட, பிறகு ஆசுபத்திரியும் இடம் பெயர்,



இனி இருக்ககேலாது எண்டு அதுக்குப் பின்னால நாங்களும் ஓடிப் போக வேண்டி இருந்தது. இதால சைக்கிள் கட்டாயம் தேவை எண்டதால ஆக்களிலும் பாக்க அதைக் கழுவித் துடைச்சு கவனமாப் பாக்க வேண்டி இருந்திச்சுது. அடிக்கடி அடிக்கிற செல்லுக்கு இப்பிடியே போக்கும் வரவுமாய் இருந்த படியா எப்பவும் ஓட ரெடியா சைக்கிளை வைச்சிருக்கிறனாங்கள்.

ஒயில் ஓடிக்காஞ்சு போன கறுத்த மண், எண்ணையில வழுக்கிற உடைஞ்சும் உடையாத சீமெந்து தரை, ஆண்டாண்டு காலமா தடீல தொங்கிற பழயை ரயர்கள், குமிச்சு அடுக்கின கறள் கட்டின rims, ஆணிகள் அடிச்ச பக்கீஸ்பெட்டீல தொங்கிற ஆறாம், எட்டாம், பத்தாம் , பன்ரெண்டாம் சாவி , பழைய மரப் பெட்டீக்க குறடு ,சுத்தியல் , ஸ்பனர் எண்டு கையால தொட்டாலே ஏற்பூசி போட வேண்டிய நிலைமையில கறள் கட்டின சாமாங்கள், குறுக்கால வெட்டின பழைய பரல் ஒரு மாதமா மாத்தாத தண்ணியோட, ஓட்டு தீராந்தீல இருந்து தொங்கிற ரெட்டைப்பட்டுச் சைக்கிள் செயின் நுனியில வளைஞ்ச ரெண்டு கம்பி அதில முன்காலைத் தூக்கின குதிரை மாதிரி ஏத்தி விட்ட சைக்கிள், நிலத்தில விரிச்ச சாக்கில் வால் பிளேட், கத்திரிக்கோல், பாதி தேஞ்ச அரம், வடிவா வெட்டின வெவ்வேறு சைஸ் சதுர ரியூப் துண்டு, பினாட்டு மாதிரி கறுப்பா உருட்டின கொம்பவுண்ட் , பிங் கலர் சொலூசன், ஒட்டுப் போட்டாப் பிறகு வல்கனைஸ் பண்ண (அவிக்கிறதுக்கு) ஒரு செட்டப் இவ்வளவும் இருந்தால் இது சைக்கிள் கடை. கடையில ஒரு பெரிய boss ம் மற்றது வேலை பழகிற சின்ன boss எண்டு ரெண்டு பேர் தான் இருப்பினம்.

கடை இப்பிடி இருக்கிறதால கடைக்காரரை சில்லறை ஆள் எண்டு நெக்கக்கூடாது. சில Senior citizens ன்டை கடைகள் இருக்கும் அவைகளுக்காக, என்ன அவை திறந்திருக்கிறதிலும் பாக்க பூட்டி இருக்கிறது தான் கூட.எங்களுக்க ஏத்த மாதிரி கடையைத் தான் தேடிப் போறது. எங்கடை வயதுக்காரர் ஆனால் அவை boss. நாங்கள்சைக்கிளை உருட்டிக் கொண்டு போய் கடையில விட எங்களைக் கண்டாலும் busy மாதிரி கவிட்டு வைச்ச பழைய wheel spoke க்குள்ள சில்லை வைச்சு பக்கிள் எடுக்கிறவங்கள், காத் தடிக்கப் பொம்பிளைப் பிள்ளைகள் வந்தால் எழும்பி ஓடிப்போய் உடனயே கவனிப்பாங்கள்.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

கவனிப்பு சைக்கிளுக்கும் ஆளுக்கும் பலமாய் இருக்கும். அடிக்கடி இந்த கதை நடக்கும்

" என்ன கனநாளா காணேல்லை "" ஏன் சும்மா சும்மா வாறதே """அண்டைக்கு ஆரோ பெடியன் பின்னால வந்தான்"


" எனக்கு அப்பிடி ஒருத்தரும் இல்லை" ( confirmation)

காத்தடிச்சிட்டு,பக்கத்தில நிண்ட சைக்கிளில இருந்து வால்கட்டையின்டை உயிலைக் கழற்றி பூட்டீட்டு " இது இல்லாட்டி மண் போய் அடைச்சிடும் " எண்டு சொல்லி, அதோட பிறேக்கையும் சரிபாத்திட்டு விட்டு " எவ்வளவு """சீ காசு வேணாம், அடுத்த முறை பாப்பம் " சொல்லாத thank you சிரிப்பை வாங்கிக் கொண்டு வந்து எங்களைக் கவனிக்காமல் திருப்பியும் buckle எடுக்கத் தொடங்குவாங்கள்.

இதை கவனிச்சும் இல்லாத மாதிரி, "கழுவிப் பூட்டேக்க எதையும் மாத்திப் போடுவான்" எண்டு அம்மா சொன்னதால, நாள் முழுக்க கடையிலயே இருந்து லாபம் பாத்து சாமாங்களை வேண்டித் தாறம் எண்டு சொல்லி , ஒரு போத்தில் மண்ணெண்ணை, இருவது ரூவாக்கு கிறீஸ், ரெண்டு சைசில ஐம்பது சைக்கிள் போள்ஸ் எல்லாம் வாங்கிக் குடுத்து , கழட்டி வைக்கிறதை கவனமாப் பாத்துக்

27 ஆம் பக்கம் பார்க்க...




வெற்றிமணி திருமண சேவை

முதுகலைப்பட்டபடிப்புடன் கௌரவமான வேலையிலிருக்கும் மணமாகி விவாகரத்தான 40 வயதுடைய பெண்ணுக்கு பெற்றோர்கள் வரன் தேடுகின்றனர். வரன் லண்டன் யேர்மனி சுவிஸ் ஆகிய நாடுகளில் வசிப்பவராக இருக்க வேண்டும் .

தொடர்புகளுக்கு: 0049 1774219510

Woman , a postgraduate and having prestige job, 40+ of age. married and divorced. Her Parents seek groom from one of the following countries> London> Germany and Switzerland.
For Contacts. 0049 1774219510.



# காதல் கடை



கொண்டிருந்து, கழுவிப்பூட்டிற வருக்கு கேக்காமலே ஒத்தாசையும் செய்தாத் தான் சைக்கிள் கெதியாக் கிடைக்கும்.

புதுசா வாங்கின சைக்கிள் ஆருக்கு நேந்ததோ தெரியேல்லை வாங்கி ஒரு வருசத்திலயே காணாமல் போக, ரெண்டு வருசமா பஸ்ஸில அலையவிட்டு வாங்கித்தந்தது தான் கழுவிப் பூட்டக் கொண்டந்த இந்தப் பழசு. இதாலயே பட்டப்பேரும் பழசு எண்டு வந்திச்சுது.

நிண்டு கால் நோக இருக்க இடமில்லாமல் பெரிய கரியர் ஓட நிண்ட சைக்கிளை central ஸ்டாண்டில விட்டிட்டு அதில இருந்தபடி சாடயா கண்ணயர்ந்து விழப்பாக்க, " தம்பி போய்ச்சாப்பிட்டிட்டு வாரும்" எண்டு சைக்கிள் கடைக்காரர் சொன்னார். "இல்லை பரவாயில்லை இருந்து எடுத்துக்கொண்டே போறன்" எண்டு நம்பிக் கையில்லாமல் சொல்ல , அப்ப கொஞ்ச நேரம் இரும் நான் சாப்பிட்டிட்டு வாறன் எண்டு ஒரு மணிக்குப் போனவர் திருப்பி வர மூண்டு மணி ஆச்சிது.

என்னை வைச்சு அடிக்கடி சின்னச்சின்ன வேலையும் வாங்கீட்டு பின்னேரம் வரை விடாக்கண்டனா என்னை சைக்கிள்கடைக் கொடாக்கண்டன் "ஆறு மணியாயீட்டுது இருட்டீட்டுது நாளைக்குப் பாப்பம் " எண்டு சொல்லீட்டு சாமாங்களை உள்ள எடுத்து அடுக்க வேற வழியில்லாமல் வீட்டை போனன். ஒருமாதிரி அடுத்த நாள் சைக்கிளை எடுத்து உழக்கிக் கொண்டு போக செயின் கவரோட முட்டிற சத்தம் கேக்க ஒரு தட்டுத் தட்ட நிண்டிட்டுது சத்தம்.

எத்தினை சைக்கிள் ரோட்டில போனாலும் எங்கடை வேண்டிய ஆரும் சைக்கிளில வாறதை தூரத்தில வரேக்கையே கண்டு பிடிக்கலாம். ஒவ்வொருத்தன்டை சைக்கிளுக்கும் ஒரு சத்தம் இருக்கும் வாறதை கண்டு பிடிக்க, மணி அடிக்கிற சத்தம், பிரேக் பிடிக்கேக்க வாற சத்தம், செயின் உரஞ்சிற சத்தம் எண்டு எல்லாச் சத்தங்களும் உதவி செய்யும் அதோட அவன் அரைக்குண்டீல ஓடிறானா, சீட் நுனீல இருந்து ஓடிறானா, காலை அகட்டி ஓடிறானா எண்டு ஓடிற ஸ்டைலிலேம் கண்டு பிடிக்கலாம்.

ரியூசன் வகுப்புகள் முடிஞ்சு பின்னேரம் எண்டால் பிரவுண் ரோட்டில குமரன் வீட்டு ஒழுங்கை முடக்கில சாத்தீட்டு நிக்க ஒவ்வொருத்தரா வருவாங்கள். வந்து வழமை போல அரட்டை தொடங்கும். கடைசீல் நேற்றைக்க அடிச்ச செல் விண் கூவினதையும், யாரை யார் பாக்கிறாங்கள் எண்ட update ஓட கூட்டம் கலையும். ஒருநாள் இப்பிடித்தான் தேடிப் போனா குமரனைக் காணேல்லை. அவன் உங்களோட தானே வந்தவன் எண்டு அம்மா சொல்ல, "டேய் அவன் நேற்றைக்கு சேகரோட ஒளிஞ்சு ஒளிஞ்சு கதைச்சவன் ஒரு வேளை இயக்கத்துக்குப் போட்டானோ" எண்டு பிரகாஸ் கேக்க "விசரே உனக்கு இவனாவது போறதாவது, வா கபிலன் வீட்டை போய்ப் பாப்பம்" எண்டு நவாஸ் சொல்ல போய்ப்பாத்தால் அங்கையும் இல்லை. காணேல்லை எண்டு ரோடு ரோடாத் தேட, கலட்டீக்க புதுசாத் திறந்த சைக்கிள் கடையில காத்துப் போகாத வலசநக்கு காத்து அடிச்சும் வந்தவனுக்கெல்லாம் அடிச்சு விட்டு சமூக சேவை செய்து கொண்டு நிண்டான். ஏனெண்டு கேக்க அண்டைக்கு ரோட்டால போகேக்க பாத்துச் சிரிச்ச பிள்ளை இந்த இடத்தில தான் எங்கேயோ இருக்குதாம் எண்டான். கடைசீல இண்டைக்கு காணேல்லை நாளைக்கு ஒருக்கா வந்து பாப்பம் எண்டு எங்களோட வந்தான்.



இவனுக்கு அவனுக்கு மட்டும் இல்லை எங்கள் எல்லாருக்கும் சுழற்றித் திரிஞ்ச காலத்தில ஒண்டிறதுக்கு எண்டு ஒரு சைக்கிள் கடை இருந்தது. முதலில அந்தப் பிள்ளை இருக்கிற ஏரியாவில ஒருத்தனை கசநைனெ பிடிச்சு, அவனோட போய் அவளின்டை வீட்டிக்கு கிட்ட இருக்கிற சைக்கிள் கடைக்காரனை friend பிடிச்சு , பிறகு ரியூசன் கொப்பியோட வெளிக்கிட்டு நேராச் சைக்கிள் கடையில போய் இறங்கினதும் உண்டு. தப்பித்தவறி தெரிஞ்ச ஆக்கள் வந்து கேட்டால், சைக்கிள் காத்துப் போட்டுது எண்ட பொய்யோட சமாளிக்கலாம். கடைக்காரனிற்கும் காத்தடிச்சு விட, சாவியை எடுத்துத் தர எண்டு காசில்லாமல் உதவி செய்ய ஒருத்தன் கிடைக்கிறதால பேசாம இருந்திடுவான்.

அப்ப சைக்கிள் கடை தான் கன பேரின்டை காதலை develop பண்ண உதவி செய்யிற கடையா இருந்திச்சுது. இப்ப சைக்கிளும் குறைஞ்சு, சைக்கிள் கடையும் குறைஞ்ச படியால் இப்பத்தைப் பெடியள் என்ன செய்யிறாங்களோ தெரியேல்லை.




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## 15 ஆம் பக்கத் தொடர்ச்சி... கருபிக் கடலில் 14 நாட்கள்

உல்லாச பயணிகள் வரவு, அவர்களுக்கு பெருவரவு. நட்புடன் பழகும் மக்கள் உலாச பயணிகளின் வரவை ஊக்கிவிக்கும்.

CURAÇAO. துறைமுகம்,அடுக்கடுக்காக பல வீடுகள். வண்ண வண்ண வீடுகள்,ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு வண்ணம். அதுவும் அழகாகவே இருந்தது. கரீபியன் தீவுகளில் இங்குதான் அதி உயர் பாலம் ஒன்று உண்டு. சில வீடுகள் டச்சு பாணியில் அமைந்து இருந்தன. பிரதானமான பயிர்ச்செய்கையாக,வாசனை மசாலா, காணப்படுகின்றன. சந்தையில், பப்பாபழம், மாம்பழம், வாழைப்பழம் இவற்றைக்காண முடிந்தது.



### 30.01.2024 Kralendijk Bonaire

அடிமைகள் இறங்கும் கடற்கரையில் கம்பனிகளின் நிறத்தில் வெள்ளை, நீலம், காவி என நிறங்களில் தூண்கள் இருக்கும். இங்கு உப்பு விளைகிறது. அடிமைகள் வாழ்ந்த வீடுகள் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன. ஒரு வீட்டில் 2 பேர்மட்டுமே இருக்கலாம். ஆனால் 7 பேர்வரை தங்கினார்கள். வீடுகளுக்கு கதவு மட்டுமே உண்டு யன்னல் ஏதும் இல்லை. இங்கு சகல மாணவர்களுக்கும், இலவசக் கல்வி. சீனாவின் ஆதிக்கம் பரவலாக எங்கும், உள்ளது. வருடம் 1000 குழந்தைகள் பிறக்கின்றன. பிறப்பு வீதம் அதிகரித்து உள்ளது.



### 31.01.2024 முழுநாள் கடற்பயணம்

30 பாகை வெட்பம், நல்ல காற்று, தொலைபேசி அற்ற அற்புதமான 1980 களை நினைவூட்டின பலரது கைகளிலும் புத்தகங்கள் புத்துயிர் பெற்று இருந்தன. துறைமுகம் வரும் வரை காத்திருங்கள் அடுத்த இதழில் சந்திப்போம்.

## 13 ஆம் பக்கத் தொடர்ச்சி... பரசிவ வெள்ளம்

மருதா நாட்டியாஞ்சலி, திருவையாறு நாட்டியாஞ்சலி போன்ற பல கோவில்களில் முன்னைய வருடங்களில் நாட்டியாஞ்சலி வழங்கி உள்ளோம்.நாட்டியாஞ்சலி நிகழ்வுகள் எந்த பேதமும் இன்றி, ஆடல் வல்லானுக்கான பரிபூரண சமர்ப்பணமாக நிகழ்வது பெரிதும் போற்றத்தக்கது.

**யாதுமாம் ஈசவெள்ளம்**
**என்னுள் நிரம்பியதென்**
**றோதுவதே போதுமதை**
**உள்ளுவதே போதுமடா.**

ஆதலினால், அவனருளாலே அவன் தாள் வணங்கி என்ற பேருண்மையை உணர்ந்து , உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் சிவ வெள்ளம் அன்றிப் பிறிதில்லை என்று கண்ணீர் மல்கி தன்னை மறந்து நின்றோம். சிவனடியில் பண்ணிய பிரார்த்தனைகள் யாவும் எல்லா உயிர்களும் இன்பம் எய்தச் சென்றடைக

**இப்பொருளைக் கண்டார்**
**இடருக்கோர் எல்லைகண்டார்**
**எப்பொருளுந் தாம்பெற்றிங்**
**கின்பநிலை யெய்துவரே**
**தவமொன்று மில்லையொரு**
**சாதனையு மில்லையடா**
**சிவமொன்றே யுள்ளதெனச்**
**சிந்தைசெய்தாற் போதுமடா.**

## 21 ஆம் பக்கத் தொடர்ச்சி... ஆரம்பிக்கலாமா?

இது மகிழ்ச்சியைக் கொடுக்கும் விடயமாக இருக்கின்றது. றுகைை என்பதற்கு அருகலை, online இயங்கலை Degital எண்மின், Zoom என்பது குவிகம் என்றும் அவற்றிலேயே எம்முடைய தமிழை ஏற்றி நாம் பயணம் செய்கின்றோம்.

இவ்வாறான சாதனங்களைக் கண்டுபிடிப்பவர்களாக நாம் மாறவேண்டும். அப்போது தான் தமிழின் புகழுக்கேற்பத் தமிழனின் புகழும் ஓங்கும். அந்நியர்களின் கண்டுபிடிப்புக்களு க்குப் பெயர் வைக்கும் பெருமை எமக்கு இருப்ப துபோல அவற்றைக் கண்டுபிடிப்பவர்களாக நாம் எப்போது மாறப்போகின்றோம். ஆரம்பிக்கலாமா?

## 14 ஆம் பக்கத் தொடர்ச்சி... வெள்ளரிக்காய்

இன்று கல்முனையில் கொதிக்கும் வெய்யிலில் கல்முனை அக்கரைப்பற்று பிரதான தெரு வீதியில் பல இடங்களில் இந்த வெள்ளரிக்காய் குவியலாக விற்பனைக்கு வந்துள்ளது.

தென்னை ஒலையில் வலையாக ஒரு பை பின்னி, அதனுள் வெள்ளரிக்காய் வைத்து, மோட்டசைக்கிளில் எடுத்து வந்து கூடுகட்டி பெரும் தெருவில் விற்றால், யார்தான் வாங்க மாட்டார்கள்.

300 ரூபாய் இல் இருந்து 1000 ரூபாய் வரை வெள்ளரிக்காய் விலைபோகிறது, யாவும் இயற்கையின் கொடை. அதனை விற்று காலத்தே பயிர் செய்பவர்கள் வாழத்தெரிந்தவர்கள். இயற்கை அன்னை தந்தெல்லாம் எல்லோர் க்கும் சொந்தமடா.

என்ற பாடல் எங்கோ ஒரு மூலையில் பாடினாலும், காதோரம் கேட்க வைக்கும் வெள்ளரிக்காய்களுக்கு நன்றி. தண்ணீர் விற்பனையாகும் நாட்டில் வெள்ளரிக்காய் ஆயிரம் விற்றலும் இயற்கை தடுக்காது. வாங்குபவன் விவசாயி இல்லையே.

## 07 ஆம் பக்கத் தொடர்ச்சி... பாரம்பரிய பெருமை

காணாமல்போன நபரையோ பொருளையோ கண்டுபிடித்துவிடலாம் என பல சினிமாக்களிலும் பார்த்திருப்போம் இல்லையா? உண்மையில் மந்திரத்தை சொல்லிக் கொண்டு வெற்றிலையில் மை போட்டுப் பார்த்தால், எல்லாமும்

வி/வலாக தெரியும் என்பதெல்லாம் இல்லை. மை போட்டபின் வெற்றிலையில் தெரியும் ரேகைகள் சொல்லும் திசையினை வைத்து அனுமானமாக குறி சொல்லப்படும்.

அவர்கள் கூறிய திசையில் தேடிச் சென்றால் தொலைந்தது கிடைக்கும் என்பது நம்பிக்கை அவ்வளவுதான் !

## 09 ஆம் பக்கத் தொடர்ச்சி... 50 € போட்ட குட்டி....

முப்பது வருடங்களுக்கு முன் சந்தித்த அந்த இளைஞன் இவரிடம் ஓடிவந்து, இவரை அழைத்துக் கொண்டு தன்னுடைய அலுவலகத்திற்குச் சென்று, ஒரு பைலை எடுத்து அவர் முன் வைத்தான்.

இதில் ஐந்து கோடி டாலர் பணம் இருக்கின்றது. இவை அனைத்தும் உங்களுக்கே சொந்தம் என்று சொன்ன அந்த வார்த்தையை கேட்ட அந்த 60 வயது நபர் அதிர்ந்து போனார். மேற்கொண்டு இளைஞன் சொன்னான், ஆம் நீங்கள் அன்று கொடுத்த 50 டாலர் பணம், முதலிட்ட இடங்களில் பணத்தை அள்ளிக் குவிக்க, நீங்கள் இந்த ஊரை விட்டு சென்று விட்டதனால், அந்த லாபத்தை நான் மீண்டும் மீண்டும் பங்குச் சந்தையிலேயே போட்டு, அதில் வருகின்ற லாபத்தை மீண்டும் மீண்டும் பங்குச்சந்தையில் போட்டு, இன்று உங்களுடைய பணம் ஐந்து கோடி ஆக பெருகி இருக்கின்றது என்று ஆச்சரியப்படுத்தினான். இது எப்படி சாத்தியம் என்பதை கணித ரீதியாக பார்த்தோம் என்றால்.

இதை புரிந்து கொள்ள வேண்டும் என்றால் கணிதத்தில் வட்டி கணக்கு என்கின்ற ஒரு பகுதி உங்களுக்குத் தெரிந்திருந்தால் மட்டும் தான் இந்த விடயத்தை புரிந்து கொள்ள முடியும்.

உதாரணத்திற்கு ஒரு நூறு டாலர் பணத்திற்கு பத்து விழுக்காடு (10%) வட்டி கிடைக்கும் என்று வைத்துக் கொண்டோம் என்றால், நூறு டாலர் பணம் ஒரு வருடத்தில் 313.84 டாலர் பணத்தை உருவாக்கியிருக்கும்.

இது ஒரு பெரிய பணம் கிடையாது. ஆனால் 10 வருடத்தில் எவ்வளவு பணம் சேர்ந்து இருக்கலாம் என்று நினைக்கின்றீர்கள்? இந்த கணக்கின்படி பார்த்தாலே நீங்கள் நினைப்பீர்கள் (313 x 10ஸ்ரீ 3130 டாலர்) ஏனென்றால் 10 வருடம் ஆகவே 3130 டாலர் கிடைக்கும் என்று நினைப்பீர்கள்.

இதுதான் சாதாரண கணிதம். ஆனால் Compounding Effect மூலமாக உண்மையிலேயே வெறும் பத்து வருடத்தில் 9 270 907 டாலர் பணம் சேர்ந்திருக்கும்.







அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# ஓடிக் களைத்த கால்களும் தட்டிக் களைத்த என் கைகளும்




**பூங்கோதை**
(இங்கிலாந்து)

என்னுடைய மகன் போலவே அத்தனை ஓட்ட வீரர்களும் தமது சக்தி அனைத்தையும் தம் கால்களுக்குப் பாய்ச்சிய படியே எம்மைக் கடந்து சென்ற போது என் கைகளுக்கும் தட்டுவதற்கு அத்தனை சக்தியும் எங்கிருந்தோ வந்து சேர்ந்தது. கரகோசத்தைக் கொடுத்த மக்களுடன் இணைந்து கொண்டேன். அது ஒரு உன்னதமான, நெகிழ்வான தருணம்.

ஒரு முழுமையான மரதன் ஓட்டம் என்பது 26.2 மைல்களை ( 46 கிலோ மீட்டர்கள்) ஓடிக் கடப்பது. இதற்கு உடற்பலத்தை விட மனத்திடமே அதிகமாகத் தேவைப்படும் என்பதைக் கடந்த 10.3.2024 இல் பார்சலோனாவில் நடைபெற்ற மரதன் ஓட்டத்தைப் பார்த்துப் புரிந்து கொண்டேன். ஓட்ட வீரர்கள் அனைவருக்கும், மகனார் உட்பட ஒரு கைத்தொலைபேசி பயன்பாட்டு இணைப் பொன்றை ( google link) நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்கள் வழங்கியிருந்தனர். அந்த இணைப்பினூடாக எவ்வளவு தூரத்தில் எவ்வளவு நேரத்தில் மகன் அந்த பிரமாண்டமான, இரம்மியமான நகரத்தை ஓடிக் கடந்து கொண்டிருக்கிறார் போன்ற விடயங்களை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. மனதில் இலேசான ஒரு பதற்றம் இருந்ததை, அவன் திறமை மேல் இருந்த நம்பிக்கை உதறி எறிந்து கொண்டிருந்தது.

40 கீலோ மீற்றரை வந்தடைந்து கொண்டிருந்த மகனின் நகர்வு குறைவடைந்து, நின்று போனபோது அவன் உள்ளம் கவர் கள்ளியின் கைகள் என் கைகளை இறுகப் பற்றிக் கொண்டன. அவள் கண்களில் இருந்து விழுவதற்குத் தயாராக இருந்த கண்ணீரைச் சந்திக்க என் கண்களுக்குப் பலம் அற்றுப் போனதை உணர்ந்த வேளை அது. ஒரு சில நிமிடங்கள் நானும் அவளும் அமைதியில் உறைந்த படியே கைத்தொலைபேசியில் அவன் நகர்வை எதிர்பார்த்து காத்திருக்க, அது மெதுவாக உயிர் பெற்று, நகர ஆரம்பிக்க எம் இருவர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர். நடுங்கிய அவள் கைகளில் வெப்பம் படர்ந்தது. மகன் இறுதிப் புள்ளியை வந்தடைந்த போது சொல்வதற்கு வார்த்தைகள் ஏதுமின்றிப் போனது.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, 20,000 க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள், ஊடு பாலினர், மூன்றாம் பாலினர், அங்கவீனர்கள் (காலூன்றிகளுடன்) என பலதரப்பட்ட மக்கள், இன, மத, மொழி, நிற வேறுபாடின்றி வெவ்வேறு பொது நிதி சேகரிப்புகளுக்காகவும் பிரத்தியேகக் காரணங்களுக்காகவும் கை கோர்த்துக் கொண்டது, உலகத்தில் பொது மக்களிடையே இன்னும் ஒற்றுமை குலையவில்லை என்பதையும் அடிப்படை மனித நேயம் இன்னும் இறந்து போகவில்லை என்பதையும் எடுத்துக் காட்டியது. சக மனித நேயம், குழு ஒருமைப்பாடு, ஒற்றுமை, சுயநம்பிக்கை, தைரியம், சவால்களை எதிர் நோக்கும் தன்னம்பிக்கை எனப் பலதும் இந்த நீண்ட ஓட்டத்தோடு பின்னிப் பிணைந்து இருந்ததை இறுதிப் புள்ளியை, பலத்த சவால்களுக்கிடையே ஒவ்வொரு ஓட்ட வீரரும் வந்தடைந்த போது கண்டு கொண்டோம்.

# தெல்லிப்பழை அம்பனைக் கலைப் பெருமன்றமும் கவிநாயகர், மதுரகவி திரு.விகந்தவனம் அவர்களும்

**ஏலையா க.முருகதாசன்**



கவிஞர் திரு.வி.கந்தவனம் அவர்கள் இப்பொழுது எம்மோடு இல்லையென்பது இல்லை என்ற நினைவழியா நினைவுகளை மனதில் இருத்தி இக்கட்டுரையை எழுதுகிறேன். இது மகாஜனக் கல்லூரிக்கருகில் இயங்கிய அம்பனைக் கலைப்பெருமன்றத்தோடு மதுரகவி எனத் தக்கார் நிலைகொண்டு அழைக்கப்பட்ட கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் எமது மன்றத்தோடு 1968களிலும்,தொடர்ந்து பயணித்த இலக்கிய இணைவுகாண் பதிவிது. கவிஞர் திரு.வி.கந்தவனம் அவர்கள் எமது மன்றம் வருடாவருடம் நடத்திய உழவர் விழாவில் கவியரங்க நிகழ்ச்சியில் கவிநாயகராகவும், பட்டிமன்ற நிகழ்வுகளில் நடுவராக இருந்து விழாவுக்கு மெருகூட்டிச் சிறப்புச் செய்தவர்.

எமது மன்ற உழவர் விழா அம்பனை ஞான வைரவர் ஆலய முன்றலிலும்,மகாஜனக் கல்லூரி திறந்தவெளி அரங்கிலும் நடைபெற்றன.புலம் பெயர் நாடுகளில் நடனம் என்றால் அதற்கென்று அதை இரசிக்க ஒரு கூட்டம் எப்பொழுதும் இருக்கும்.ஆனால் அன்று கவியரங்கங்களையும்,பட்டிமன்றங்களையும் இரசிக்கவென விழாக்களில் பெரும்கூட்டமே கூடும். மிகச் சிறந்த கவிஞர்கள் பங்குபற்றுகையில் இலக்கியச் சுவைக்கும் சிலேடைச் சொற்களுக்கும் நகைச்சுவைக்கும் பஞ்சமே இருக்காது. கவிநாயகர் தலைமையில் அம்பனைக் கலைப் பெருமன்றத்தின் உழவர் விழாவில் திரு.கதிரேசர்பிள்ளை,திரு.நாகராஜா,திரு. ஐயாத்துரை,திரு.காரை சுந்தரம்பிள்ளை ஆகியோர் பங்கு பற்றுகிறார்கள் என்றால் அம்பனை ஞானரைவர் முன்றல் மக்களால் நிரம்பி வழியும்.உழவர் விழா மகாஜனாவின் திறந்தவெளி அரங்கில் நடக்குமானால் மைதானம் கவிஇரசிகர்களால் நிரம்பி நிற்கும்.

யார் தலைமை வகிக்கிறார் எனக் கேட்டு மதுரகவி என்பதை அறிந்து அம்பனை வயலில் வேலை செய்யும் உழவர்கள் நேரத்தோடு பட்டை கடகம்மண்வெட்டிஎனஅனைத்தையும் கூட தம்மோடு கொண்டு வந்து கவியரங்கை இரசிப்பார்கள்.சாவகச்சேரி நுணாவிலில் பிறந்து வளர்ந்து குரும்பசிட்டி என்னும் கல்வியும் இலக்கியமும் ஒருங்கிணைந்த ஊரில் திருமணம் செய்தவர் இலைக்கியச்சுவை கவிநாயகர் திரு.வி.கந்தவனம் அவர்கள்.யாழ் மாவட்டத்தில் இவரை அறியாத இலக்கியகர்த்தாக்கள் யாருமே இருக்க முடியாது.

அம்பனைக் கலைப்பெருமன்றம் குரும்பசிட்டியில் பொன் பரமானந்தா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் சிதைந்த வாழ்வு என்ற நாடகத்தை மேடையேற்றியது.நாடகப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது ஒவ்வொரு நாடகம் பற்றிய குறை நிறைகளைக் கூறிய தலைமை நடுவர் கவிஞர் திரு.வி.கந்தவனம் அவர்கள் நெருப்பு நாடகத்தில் பெண் வேடமிட்டவர் மட்டுமே நடித்திருந்தார் ஆனால் சிதைந்த வாழ்வில் அனைவருமே நடித்திருந்தனர்.ஒரு நாடகம் தோப்பாக இருக்க வேண்டும்,தனிமரம் தோப்பாகாது என்று கூறி எமது நாடகத்துக்கு முதற்பரிசை அறிவித்தார்.

ஒருமுறை உழவர் விழா சம்பந்தமாகக் கதைப்பதற்காக அப்பொழுது மன்றத் தின் தலைவராகவிருந்த திரு. ஆ.சிவ நேசச்செல்வன் அவர்களுடன் மதுரகவி அவர்களின் வீட்டுக்குப் போயிருந்தோம்.சுவையான தேநீருடன் அதைவிடச் சுவையான நகைச்சுவை கலந்து உரையாடல் அங்கு இடம்பெற்றது.ஒப்பீடுகள் சொல்லி உதாரணம் சொல்லி ஊரையாடுவதில் அவர் ஒரு விற்பன்னர்.அவரின் நினைவுகள் என்றும் எம்முடனிருக்கும்.





தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
“பண்டாரவன்னியன் புத்தகசாலையில்”
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளைஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

youtube@akkakuruvi

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# தேவை ஒரு கண்ணாடி


ஆருக்காவது உதவி வேணுமோ எண்டு பார்க்கோணும்“

எனக்கு உடனடியாக ஒன்றுமே விளங்கவில்லை. யாருக்காவது உதவி தேவைப் படும் பட்சத்தில் அதற்காக வரும் ஒருவர் தங்குவதற்கு இடம் தேடுவது உண்டு. இது இங்கு வந்து தங்குவதற்காக யாருக்காவது உதவி செய்யத் தேடுவது” குழம்பினேன். எனது குழப்பம் அவருக்குப் புரிந்திருக்க வேண்டும். இப்போது தெளிவாகச் சொன்னார் ”உங்களோடு தங்க வேண்டும்“ எனக்கு எதுவோ புரிந்தது.

“ஓ” அது சாத்தியப்படாது. என்ரை வீட்டிலை தங்கிறதுக்கான எந்தச் சாத்தியங்களும் இல்லை“ ”ஏன்.. ஏன்?“ அதிர்ச்சியோடு கேட்டார். “எனக்குக் குடும்பம் இருக்குது. கணவர் இருக்கிறார்“

“அதிலையென்ன? அவர் நாள் முழுக்க வீட்டிலையோ இருக்கப் போறார். வேலைக்கும் போவார்தானே“ “இல்லை, அது ஒரு போதும் சாத்தியப்படாது“ “ஏன் அப்பிடிச் சொல்லுறிங்கள். நினைச்சால் எதையும் சாத்தியப்படுத்தலாம்“ நான் ஆகாயத்துக்கு மேலால் உயரமாகத் தூக்கி வைத்திருந்த டொக்டர் சுதர்சனை வெடுக்கெனக் கீழே போட்டு விட்டேன். இந்தப் பூனையுமா? மனசு ஒருவித ஏமாற்றத்தில் வெட்கித்துக் கூசியது.

“உங்களுக்கு எத்தினை வயசு?“ கேட்டேன் நான் அப்படிக் கேட்டதும், வளைகிறேன் என நினைத்தாரோ? மிகுந்த உற்சாகமாக தனது வயதைச் சொன்னார். “என்ரை மகனுக்கு உங்களை விட இரண்டு வயசு கூட. அது தெரியுமோ உங்களுக்கு?“ “அப்ப Facebook இலை நீங்கள் போட்டிருக்கிற படத்திலை சரியான இளமையா இருக்கிறீங்கள்? வடிவாயும் இருக்கிறீங்கள்“ “அந்தப் போட்டோவைப் பார்த்திட்டோ இப்ப போன் பண்ணினனீங்கள்? “அதுவும் தான்” உங்கடை மற்றப் படங்களையும் பார்த்தனான்“ இழுத்தார்.



“போட்டோவை மட்டும் பார்த்திட்டு நான் வடிவு, இளமையெண்டெல்லாம் எப்பிடி நினைச்சனிங்கள்? நான் நேற்றுப் போட்டது பத்து வருசத்துக்கு முந்தி எடுத்த போட்டோ. மற்றது அதிலை பார்த்தால், நல்லா லைற் விழுந்து என்னை நல்ல வெள்ளை மாதிரிக் காட்டுது. ஆனால் நான் அந்தளவு வெள்ளையில்லை“ இப்போது அவரது கதைகளின் சுரம் குறைந்து கொண்டு போனது. ஆனாலும் நம்ப முடியாதவராய் சில கேள்விகள் கேட்டார். “நான் உங்கடை அம்மான்ரை வயசை ஒத்திருப்பன். சில வேளையிலை அதையும் விட அதிகமாகவும் இருப்பன்“ என்றேன். அவர் தடுமாறுவது வார்த்தைகளில் தெரிந்தது.

“நீங்கள் இன்னும் கலியாணம் கட்டேல்லையோ?“ கேட்டேன்.“கட்டீட்டன்“ “குழந்தையள்..?“ “இரண்டு பேர். இரண்டும் பொம்பிளைப் பிள்ளையள்“ “அப்ப ஏன் எனக்கு போன் பண்ணினனிங்கள்?“ “நீங்கள் வடிவு“ இழுத்தார் “உங்கடை பெஞ்சாதி Facebookஇலை இருக்கிறாவோ?“ “ஓம்“ ஐடி சொன்னார். பார்த்தேன். Facebook இல், புகைப்படத்தில் அந்த மனைவி மிக அழகாகச் சிரித்துக் கொண்டிருந்தார். மனைவியை அணைத்த படி டொக்டர் இருந்தார். கூடவே தேவதைகள் போல் இரு பெண் குழந்தைகள்.

‘ஐயோ இப்பிடி வடிவா இருக்கிறாவே! அவவையும் பிள்ளையளையும் அங்கை தனிய விட்டிட்டு சுவிசிலையிருந்து இங்கை அமெரிக்காவுக்கு இவ்வளவு தூரம் வரப் போறிங்களோ? அதுவும் ஆரெண்டே தெரியாத என்னட்டை “ஹி.. ஹி.. ஹி..“ அதன் பிறகு ‘நான் வடிவோ இல்லையோ?’ என்ற கேள்வியோ, ஆயிரத்தெட்டுத்தரம் கண்ணாடியைப் பார்க்கும் எண்ணமோ எனக்குள் வரவில்லை. “இப்படியானவர்களின் மனசைப் பார்ப்பதற்குக் கண்ணாடி ஒன்றிருந்தால் நல்லாயிருக்கும“ என்ற எண்ணம்தான் வந்து கொண்டேயிருக்கிறது.

DEVI FUNERAL SERVICE
Devi-Bestattungen
உறவுகள் பிரியும் போது
கவலைகளை சுமக்கின்றோம்
OPEN 24 HOURS
7 DAYS
நீங்கள் எங்களை தொலைபேசியில் அழைத்து எம்மிடம் ஆலோசனை பெறுங்கள்
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் நீங்கள் அமைத்திட 24 மணி நேர குடும்பம் சார் சேவைகளை நாங்கள் செய்யக் காத்திருக்கின்றோம்.
எமது சேவைகள்
- உலகெங்கும் அனுப்பிவைத்தல்
- எரிக்கும் இறுதிச்சடங்குகள்
- நிலத்தில் தாக்கும் சடங்குகள்
- விசேட இறுதிச்சடங்கு வகைகள்
- சமுகப்பணத்துடனான இறுதிச்சடங்குகள்
- நாங்கள் ஈமைக்கிரியை சேவைகளை உங்களுக்கு அண்மையாக உள்ள இடத்திலிருந்தும் மிகவும் குறைந்த கட்டணத்திலும் வழங்குவோம்
- வீட்டு வருகைகள்
- வார இறுதி வருகை
- துவைத்து உடை
- கலசம் அனுப்புதல்
Devi-Bestattungen
devi-bestattungen.de
info@devi-bestattungen.de
015754292746
ALL RELIGION RESPECTED

# 6 வேடங்களில் சூர்யா



இயக்குநர் சிவா இயக்கத்தில் சூர்யா நடிப்பில் வெளியாகவுள்ள படம் ‘கங்குவா’.

ஞானவேல் ராஜா இப்படத்தை தயாரிக்கிறார். அவர் இதுவரை தயாரித்த படங்களில் கங்குவா தான் மிகப்பெரிய பட்ஜட் படம். சூர்யா இப்படத்தில் 6 வேடங்களில் நடித்துள்ளார்.

பாபி டியோல், திஷா பதானி, யோகி பாபு, கோவை சரளா, கே.எஸ் ரவிக்குமார் என பல முன்னணி நடிகர்களும் நடித்துள்ளனர். தேவி ஸ்ரீ பிரசாத் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். இந்திய சினிமாவில் மிகப் பெரிய பொருட்செலவில் எடுக்கப்பட்ட படம் கங்குவா. இத்திரைப்படம் 350 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கங்குவா படத்தின் டீசர் வெளியிடப்பட்டு பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

# இளையராஜாவான தனுஷ்

47 வருடங்களாக இசைத் துறையில் யாரும் தொட முடியாத உச்சத்தில் இருப்பவர் இசைஞானி இளையராஜா. இதுவரை 7000 பாடல்களுக்கு மேல் இசையமைத்து இருக்கிறார். இளையராஜாவை இசை ஞானி என்றும் , மேஸ்ட்ரோ என்றும் அழைப்பர்.

பல விருதுகளை வென்று இருக்கிறார் இளையராஜா. இளையராஜா, இந்தியாவில் மட்டுமல்ல, உலகளவில் இசை ஆர்வலர்கள் மத்தியில் பிரபலமானவர். இப்போது, அவரது பணியை நினைவுக்கூரும் வகையில்,அவரது வாழ்க்கை பற்றிய பயோபிக் உருவாகிறது.

இப்படத்தில் இளையராஜா கதாப்பாத்திரத்தில் தனுஷ் நடிக்கவுள்ளார்.

திரைப்படத்தில் இளையராஜா இசையமைப்பாளர் ஆவதற்கு முன் அவர் பயணித்த வாழ்க்கையை எடுத்துக்காட்டும் விதமாக இருக்கும் என கூறப்படுகிறது.







# பயந்து நடுங்கினேன்

தமிழ், தெலுங்கு, ஹிந்தி என இந்திய அளவில் பிரபல நடிகையாக இருக்கும் சமந்தா சமீபத்தில் மயோசிடிஸ் எனும் அரிய வகை தசை அழற்சி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தினார்.

தொடர் சிகிச்சைக்கு பிறகு ஓரளவு அதிலிருந்து மீண்டுள்ளார்.தற்போது, மீண்டும் திரைப்படங்களில் நடிக்க ஆர்வம் காட்டி வருகிறார். அதனால், பல தயாரிப்பாளர்கள் சமந்தாவை அணுகி வருகின்றனர்.

இந்த நிலையில், நேர்காணலில் பேசிய சமந்தா, புஷ்பா படத்தில் இடம்பெற்ற ‘ஊ சொல்றியா மாமா’ பாடலுக்கு ஆடும்போது பயந்து நடுங்கினேன். காரணம், கவர்ச்சியாக நடிப்பது எனக்குத் தெரிந்தது அல்ல. அந்த அனுபவத்தைப் பெறவே அப்பாடலில் நடித்தேன் .முதல் படப்பிடிப்பின் போது பயம் ஏற்பட்டது என்று கூறியுள்ளார்.






வெற்றிமணி திருமண சேவை




யேர்மனியில்
Biologie Master படித்து
முடித்து வேலை செய்யும்
நற்குணமுள்ள 30 வயது சைவ
சமயத்தை சேர்ந்த
பெண்ணுக்கு படித்த
குணமுள்ள மணமகனை
எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு பெற்றோர்;
015781663466



அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



















அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்